விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 205 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 27 புதன்கிழமை (12.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சரத் வீரசேகரவுக்கு எதிராக
# வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள்
# அடையாள பணிப்புறக்கணிப்பு

### நீதிமன்றங்கள் செயலிழந்தன



(யாழ்ப்பாணம்)

நீதித்துறைக்கு எதிராக சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் நேற்று அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்கள் செயலிழந்து காணப்பட்டன.

(15ஆம் பக்கம் பார்க்க)



# சரத் வீரசேகர வெளியிட்ட கருத்து; நீதிமன்றம் மீதான தாக்குதல்
## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவினால் அண்மையில் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்து நாட்டின் மிகமுக்கிய அடிப்படைக் கட்டமைப்பான நீதிமன்றத்தின் மீதான மிகமோசமான தாக்குதல் எனக் குறிப்பிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நீதிமன்றத்தை சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிப்பதென்பது துடிப்பான ஜனநாயகத்தின் நிலைத்திருப்புக்கு அவசியம் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் உரையாற்றிய சரத் வீரசேகர எம்.பி, "குருந்தூர் மலையில் இருந்து எம்மை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. 15

## 15 மில்லியன் ரூபாய்
# நட்டஈடு வழங்கினார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதன் நிலையில் அவர் 15 மில்லியன் ரூபாயை நட்டஈடாக வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை 10 தவணைகளில் வழங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்ற அனுமதியை கோரியுள்ளார். 15

# சாந்தனை இலங்கைக்கு வருவதற்கு அனுமதியுங்கள்
## சாந்தனின் தாய் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்ட சாந்தனை இலங்கை வருவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரி சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பணிமனை 15

## 900 சிறுவர்கள்
# புற்றுநோயால் வருடாந்தம் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் குறைந்தது 900 சிறுவர்கள் புற்றுநோய்ப் பாதிப்பால் இனங்காணப்படுவதாகவும் அதேவேளை 100 சிறுவர்கள் நீரிழிவு நோயுடன் இனங்காணப்படுவ 15

# நவம்பர் 27ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பம்
## கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)


2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி வரை நடைபெறவுள் ளது.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்னதாக பரீட்சையை நடத்தி 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் பிரான்ஸ் கப்பல்



பிரான்ஸ் கடற்படைக் கப்பலான லோரெய்ன் நேற்றுக் காலை உத்தியோக பூர்வ பயணமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

142.20 மீற்றர் நீளமுடைய லோரெய்ன் என்று அழைக்கப்படும் இக் கப்பலானது பிரான்ஸ் நாட்டின் வான் - பாதுகாப்பு மற்றும் பல தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் போர்க்கப்பல்களில் ஒன்றாகும். (ம-7)

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் சனிக்கிழமை யாழில் கலந்துரையாடல்

திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைபடுத்துவதில் இந்தியாவின் வகிபாகம் எனும் தொனிப்பொருளில் அதிகாரப் பகிர்வுக்கான இயக்கம் ஏற்பாடு செய்த கலந்துரையாடலானது எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் தி. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள் புத்தி ஜீவிகள் என பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7)

# இலங்கை - இந்திய வெளிவிவகார செயலாளர்கள் விசேட சந்திப்பு




(கொழும்பு)

இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவாத்ரா, இலங்கை வெளிவிவகாரச் செயலாளர் அருணி விஜேவர்த்தனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பானது நேற்று காலை வெளிவிவகார அமைச்சில் இடம் பெற்றுள்ளது.

இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணம் மேற்கொண்டு இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் மோகன் குவாத்ரா நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமானம் நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தார். (ம-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் 08.07.2023 அன்று நடைபெற்ற சமூக சேவைக்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி மக்கள் பாதுகாப்பிற்கான மனித உரிமைகள் அமைப்பினால்

**"சாமஸ்ரீ தேசபந்து"**

என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
பெஷன் கவுஸ்
203, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (16275)

# குழந்தைப் பேற்றுக்காக கை மருந்து உட்கொண்ட 23 வயது யுவதி மரணம்

(கொழும்பு)

கை மருத்துவம் பார்க்கும் பெண் ஒருவரால் வழங்கப்பட்ட மருந்தை 03 நாட்கள் உட்கொண்ட பின்னர் யுவதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிகிரிய - தியகெப்பில்ல பகுதியைச் சேர்ந்த 23 வயதான யுவதி ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குழந்தைப்பேறு இன்மையால், கிரிதலே பகுதியில் கை மருத்துவமும், வழிபாட்டு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் இடத்திற்கு சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதற்காக குறித்த யுவதி தனது தாயுடன் சென்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த பெண்ணால் யுவதிக்கு 03 நாட்களுக்கான மருந்து வழங்கப்பட்டுள்ளதுடன், அதனை உட்கொண்ட யுவதி சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும் நீதவான் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் பொலநறுவை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-7)

# சதொசவை மீள கட்டியெழுப்ப அமைச்சரவை அனுமதி

சதொசவை மீளக் கட்டியெழுப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சதொச ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் அடையப்பெறாமை, குறித்த நிறுவனத்தின் மூலம் பொருளாதாரத்திற்கு பயனுள்ள வகையில் பங்களிப்புகள் கிடைக்காமை போன்ற விடயங்களை கருத்திற் கொண்டு சதொச நிறுவனத்தை மீளக் கட்டமைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய , சதொசவை மீளக் கட்டமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நெறிப்படுத்தல் மற்றும் கண்காணிப்புக் குழுவொன்றை நியமித்து, உத்தேச மீள் கட்டமைப்பு செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக வர்த்தக அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

# 77 ஆவது பிறந்த தினமும் நான்காம் ஆண்டு நினைவஞ்சலியும்



மலர்வு 12 07 1946



உதிர்வு 27 06 2019

அமரர்

**திருமதி வசந்தாதேவி கனகசிங்கம்**

தசமி திதி 12.07.2023

ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா!
ஆறாத் துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
இல்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்
தங்களின் ஆத்மா சாந்தி பெற்று
சிவனடி சேர மனம் நிறைய
வேண்டி வணங்குகின்றோம். (16245)

"வசந்தகம்"
கரகத்தாம்புலம்,
கொற்றாவத்தை.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

அனுராதபுரம் - கஹடகஸ்திகிலிய திவுல்வெவ பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக திவுல்வெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கஹடகஸ்திகிலிய- பபரஹெல பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் மாடு மேய்ப்பதற்காக அப்பகுதியிலுள்ள குளத்திற்கு சென்றபோது யானை தாக்கியதாகவும் இதனையடுத்து அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கஹடகஸ்திகிலிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக திவுல்வெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழீழம் அமைக்க இந்தியா துணை போக வேண்டும்

## இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் வலியுறுத்தல்

(கொழும்பு)

**இலங்கையில் தமிழீழம் அமைந்தால் இந்தியா மீதான அச்சுறுத்தல் குறையும் என சர்வதேச மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.**

தமிழ் ஈழ வரலாறு பற்றிய புரிதல் மற்றும் இந்து சமுத்திர பாதுகாப்பில் ஈழத் தமிழர்களின் முக்கியத்துவம் குறித்து நான்காவது சர்வதேச மாநாடு இந்தியாவில் ஸ்ரீ மகாலட்சுமி திருக்கோவில் திருமண மண்டபத்தில் ஸ்ரீ லட்சுமி நாராயண பீடம் கல்கி மகான் ஸ்ரீ மகாலட்சுமி சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டவர்கள் பேசுகையில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்காக இலங்கையில் தமிழீழம் அமைய வேண்டும் எனவும் இந்தியா தனது இன்றுள்ள வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்றும் இந்தியாவின் தென் பகுதியில் உள்ள இலங்கையில் சீனாவின் ஆக்கிரமிப்பு பற்றியும் பேசப்பட்டது.

சீனா இலங்கையின் தலைமன்னார் பகுதியில் இராணுவ தளபாடங்களை அமைத்து இந்தியாவிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருகிறது.

இலங்கையில் சீனா 99 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகேயுள்ள இலங்கையின் தென்முனையான தொண்ட்ரா விரிகுடா கடற்பகுதியில் சீனா தனது அறிவியல் அகாடமி விண்வெளி தகவல் ஆராய்ச்சி மையம் மூலம் ராடர் தளம் அமைக்கின்றது.

இதனால் இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோர பொலிஸ் படைகளின் ரோந்து கப்பல்கள், படகுகளின் இயக்கத்தை சீன ராடர் தளத்தால் துல்லியமாக கண்காணிக்க முடியும் என்கிற தகவல்கள் வெளியாகி உள்ளதால் இலங்கையில் தமிழீழம் அமைக்க இந்தியா துணை போக வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி-5)

# இலங்கையில் ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளராக மார்க்- ஆண்ட்ரே

(கொழும்பு)

இலங்கையில் ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளராக கனடாவைச் சேர்ந்த மார்க் ஆண்ட்ரே ஃபிரான்சேவை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ், நியமித்துள்ளார்.



24 ஆண்டுகளுக்கும் மேலாக ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றியுள்ள மார்க்-ஆண்ட்ரே கடந்த 8 ஆம் திகதி அமுலாகும் வகையில் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளராக அவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர், லிபியாவில் ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதியாக பணியாற்றியிருந்தார். (நி-5)

# குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 46 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 46 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

குவைத்தில் வீட்டு வேலைக்காகச் சென்று அங்கு சட்டவிரோதமாக தங்கியிருந்த நிலையில், இலங்கை தூதரகத்தில் பதிவு செய்த 46 இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களில் 39 பேர் வீட்டுப் பணிப்பெண்கள் எனவும் ஏனைய 7 ஆண்கள் வேறு தொழில்களில் ஈடுபட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த 46 பேரும் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் நீண்ட காலமாக வீசா இன்றி குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்துள்ளனர்.

இதேவேளை, நாடு திரும்புவதற்காக குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் 2000இற்கும் அதிகமான வீட்டுப் பணியாளர்கள் பதிவு செய்துள்ளதாக தூதுவர் காண்டீபன் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாகன விபத்துக்களுக்கு சாரதிகளின் கவனயீனமே காரணம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 9 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 1126 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்துகளில் 1190 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சாரதிகளின் கவனயீனத்தினால் அதிகளவான வாகன விபத்துகள் பதிவாகுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (நி-5)



# தேங்காய் விலை குறைய வாய்ப்பு

(கொழும்பு)

அடுத்த மாதத்திற்குள் தேங்காய் ஒன்றின் விலை 50 ரூபாவால் குறையலாம் என தென்னை உற்பத்தியாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், இது உள்ளூர் தென்னை கைத்தொழிலைப் பாதிக்கும் என தென்னை உற்பத்தியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 100 ரூபாவைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மிட்டாய் இறக்குமதிக்காக அதிகம் செலவிடும் இலங்கை

(கொழும்பு)

இனிப்பு உணவு வகைகளின் இறக்குமதிக்காக டொலர் கையிருப்பு அதிகளவில் செலவிடப்படுவதாக அண்மைய புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த ஆண்டு மே மாத இறுதிக்குள் இலங்கைக்கான மிட்டாய் மற்றும் இனிப்பு உணவுகள் இறக்குமதிக்காக 220.5 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிடுகையில் 123 மில்லியன் டொலர்கள் அதிகளவில் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் முதல் மாதங்களில் மிட்டாய் மற்றும் இனிப்பு உணவுகள் இறக்குமதிக்காக 98.6 மில்லியன் டொலர்கள் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-5)

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம்

# இலங்கை அரசாங்கம் தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கை மேலும் அதிகப்படுத்துகிறது

## சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள்

(கொழும்பு)

தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கை மேலும் ஆழப்படுத்தக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கம் குறித்த ஜனாதிபதியின் அறிவிப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கையிடம் கேள்வி எழுப்ப வேண்டுமென சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு மற்றும் காணாமல் போனோர் குடும்ப ஒன்றியம் ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கை யிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளன. அதில் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்.

அத்துடன் அதனை முன்னிறுத்தி நம்பகத்தன்மை வாய்ந்ததும் அனைவரையும் உள்ளடக்கியதுமான நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப் படவேண்டும் என்று இலங்கை தொடர்பான உலகளாவிய காலாந்தர மீளாய்வின் போது நெதர்லாந்து, ஜேர்மனி, நியூஸிலாந்து, நோர்வே, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பரிந்துரைத்திருப்பது குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். இருப் பினும் இப்பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்த நிராகரிப்பானது கடந்தகால மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டப்படுவதை இழுத்தடிப்பு செய்யப்படுவதற்கான சாத்தியப்பாட்டையே காண்பிக்கின்றது.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட முன்னைய கட்டமைப்புக்களை ஒத்ததாகத் தற்போது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் முன்மொழியப் பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்யத் தவறியிருக்கின்றது.

பொறுப்புக்கூறல் தொடர்பில் மேலும் பல கேள்விகளைத் தோற்றுவிக்கக்கூடியவகையில் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள (முன்னைய யுத்த வலயத்தில்) மனிதப்புதைகுழியானது பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் பதற்றத்தை மேலோங்கச்செய்திருக்கும் பின்னணியிலேயே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது குறித்துப் பேசப்படுகின்றது.

குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான பதிலீடாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதென்பது சர்வதேச நியமங்களுக்கு முற்றிலும் முரணானதாகும் என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோகித் சர்மாவை மட்டும் விமர்சிப்பது நேர்மையற்றது

## ஹர்பஜன் சிங்



ரோகித் சர்மாவின் கப்டன்ஷிப் குறித்து இந்திய முன்னாள் சுழற்பந்து வீச்சாளர், ஹர்பஜன்சிங் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், "ரோகித் சர்மாவின் கப்டன்ஷிப் குறித்து அதிகமாக விமர்சிக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் ஒரு அணி விளையாட்டு. தனிநபரால் அணியை குறிப்பிட்ட இடத்துக்கு கொண்டு செல்ல முடியாது. டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் இந்திய அணி நன்றாக ஆடவில்லை என்பது உண்மை தான்.

நீங்கள் அணியின் செயற்பாடு குறித்து பேசிவிட்டு அந்த இடத்தில் இருந்து நகர்ந்து விட வேண்டும்.

ஆனால் ரோகித் சர்மாவை மட்டும் குறி வைத்து விமர்சிப்பது நேர்மையற்றது. உண்மையில் அவர் ஒரு அற்புதமான கப்டன். அவருடன் நான் இணைந்து விளையாடி இருக்கிறேன்.

அவரை நெருக்கமாக கவனித்து இருக்கிறேன். அவரது தலைமைத்துவத்துக்கு மும்பை இந்தியன்ஸ் அணியின் ஓய்வறையில் மட்டுமல்ல, இந்திய வீரர்களின் ஓய்வறையிலும் நிறைய மதிப்பு, மரியாதை உண்டு.

சமீபத்திய சில ஆட்டங்களின் முடிவை வைத்து அவரது கப்டன் ஷிப்பை மதிப்பிடுவது நியாயமற்றது. இது மாதிரி குற்றம் சாட்டுவதை விட்டு அவருக்கு நாம் ஆதரவாக இருக்க வேண்டியது அவசியம்.

அவருக்கு இந்திய கிரிக்கெட் வாரியம் பக்கபலமாக இருக்க வேண்டும். கிரிக்கெட் வாரியத்தில் அவருக்கு எந்த அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆனால் இது போன்ற ஆதரவு தான் அவர் சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்க உதவிகரமாக இருக்கும்" எனத் தெரிவித்தார்.(4)

# இருந்தாலும் தொல்லை இல்லையென்றாலும் தொல்லை

## தீபக் சஹாரை கலாய்த்த டோனி



நடந்து முடிந்த ஐ.பி.எல் தொடரில் சென்னை அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதன்மூலம் 5 முறை கிண்ணத்தை வென்ற மும்பை அணியின் சாதனையை சென்னை அணி சமன் செய்தது.


சென்னை அணி கிண்ணத்தை கைப்பற்ற தீபக் சாஹரும் ஒரு காரணமாக திகழ்ந்தார்.

இந்த ஐ.பி.எல் தொடரில் தீபக் சாஹரிடம் நிறைய முறை டோனி வம்பிழுப்பது போன்ற வீடியோக்களை காண முடிந்தது. இந்நிலையில் தீபக் சாஹர் குறித்து டோனி கூறியதாவது தீபக் சாஹர் ஒரு போதை மருந்து போன்றவர். அவர் இங்கு இல்லை என்றால், அவர் எங்கே இருக்கிறார் என தேடுவோம்.

அவர் இருந்தால், அவர் ஏன் இங்கே இருக்கிறார் என்று நீங்கள் நினைப்பீர்கள். வயதுக்கேற்ற மெச்சுரட்டி அவரிடம் இல்லை. அதற்கு நீண்டகாலம் ஆகும். எனது மகள் 8 வயதில் கொண்டுள்ள புத்திசாலித்தனத்தை தீபக் 50 வயதில் பெற்று விடுவார். ஒயின் எப்படி நாளாக நாளாக சிறப்பு பெறும் என கூறுவார்களோ. அப்படித்தான் தீபக் சாஹரும். ஆனால் அந்த ஒயினை நான் குடிக்க முடியாது. தீபக் முதிர்ச்சி அடைவதற்குள் எனக்கு வயதாகி விடும் என அவர் தெரிவித்தார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2874


கபிலா




ஹாலிட்




விசால்




விஜி




மிருஷாலி




கவிந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மருத்துவமனைகளின் குறைபாடுகளை எதிர்த்து கொழும்பில் போராட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள அரச மருத்துவ மனைகளில் நிலவும் குறைபாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று செவ்வாய்க்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டமானது கொழும்பு தேசிய மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப வியலாளர்களின் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

குறித்த போராட்டமானது மருத்துவ உபகரணங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, மருத்துவ ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் நிலைமை, மருத்துவமனைகளிலுள்ள குறைபாடுகள் என்பவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ளும் முகமாக முன்னெடுக்கப்பட்டது. (நி-5)

# இயந்திரக் கோளாறுகளால் அதிகரிக்கும் சிறுநீரக நோயாளிகளின் மரணம்

(கொழும்பு)

கண்டி தேசிய மருத்துவமனையில் இயந்திரக் கோளாறுகள் காரணமாக சிறுநீரக நோயாளிகள் மரண எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

கண்டி, தேசிய மருத்துவமனை சிறுநீரகப் பிரிவில் டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வந்த 7 நோயாளிகள் இரண்டு மாத காலப்பகுதியில் உயிரிழந்துள்ளனர்.

அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், உபகரணங்களில் ஏற்பட்ட கோளாறே அவர்களின் மரணத்திற்கான காரணமாக இருக்கலாம் என மருத்துவமனை அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (நி-5)

# ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஆபத்து கொழும்பில் வெடித்த போராட்டம்

(கொழும்பு)

ரணில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக கொழும்பில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் தொழில் திணைக்களத்திற்கு முன்பாக, இலங்கை தொழிற்சங்கங்களினால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவு வழங்கி மக்களின் ஈ.பி.எப் மற்றும் ஈ.ரீ.எப் பணத்தினையும் அதன் நன்மைகளையும் கிடைக்க விடாமல் செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (நி-5)




## கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.(வ.து)
## பதவி வெற்றிடம்

**பதவியும் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளும். (02/2022இன்படி)**

01. *101/ 07* பொது முகாமையாளர் வெற்றிடம் 01
சம்பள அளவுத் திட்டம் 21125-275X10-300X10-26875

அ கூட்டுறவு ஊழியர் 08ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /
கூட்டுறவு ஊழியர் 09ஆவது சம்பளத்திட்டப்பதவியில் முகாமைநிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்/அதற்குச் சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/வியாபார புள்ளிவிபரவியல்/வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருந்தல் வேண்டும் / இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

1) வயது 18 -45
2) சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
3) சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4) கூட்டுறவுச் சங்கத்தில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5) தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி 24.07.2023ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெல்லியடி, கரவெட்டி என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்க வேண்டும்.

(சி-6901)

தலைவர்,கட்டைவேனி நெல்னியடி ப.நோ.கூ.சங்கம்,
நெல்னியடி, கரவெட்டி.021 226 3263.


# இராசிபலன்

12.07.2023
ஆனி 27, புதன்கிழமை
தசமி முன்னிரவு 9.48 மணிவரை
பரணி முன்னிரவு 11.43 மணிவரை

சுபநேரம் -4.29-5.57 மணிவரை
இராகுகாலம்-11.59-1.29 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்-
உத்தரம்,அத்தம்

**வளவன்**

**மேஷம்** சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், நல்லவர்கள் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், வியாபார விருத்தியுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், முயற்சிகள் தாமதமாகலாம்.

**துலாம்** பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் உதவ முன்வருவர்.

**தனுசு** புத்திசாதுரியமாக நடந்து முன்னேற்றம் காண வேண்டிய நாள்,. உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தாழ்ந்த சுபாவ முண்டு.

**மகரம்** வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்** எதற்காகவும் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, உறவினர் வழியில் நன்மையுண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்** குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுவாழ்வில பாராட்டும் புகழும் கூடும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

எதிரிக்கு பதிலளிக்கும் முன் அவனைப் புரிந்து கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மீன்பிடி சட்டம் தொடர்பில்

# மீனவ சங்கங்கள் கலந்துரையாட விரும்பினால் ஏற்பாடு செய்ய தயார்

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

திருத்தப்படவுள்ள புதிய மீன்பிடி சட்டங்கள் தொடர்பில் மீனவ சங்கங்கள் கலந்துரையாட விரும்பினால் அமைச்சில் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர்நாயகமுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ் பாடி விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் எழுப்பிய கேள்வி தொடர்பில் அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் புதிய மீன்பிடிச் சட்டத்தால் வடக்கு மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படுமா என கேள்வி எழுப்பியதுடன். புதிய சட்டங்கள் தொடர்பில் சாதக, பாதக தன்மைகள் தொடர்பில் முற்கூட்டியே அமைச்சருடன் கலந்துரையாட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் அமைச்சர் தெரிவிக்கையில் இலங்கையில் உள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களிலும் புதிய மீன்பிடிச் சட்டம் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதன் போது புதிய சட்டத்தில் மீனவர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பில் வருகை தரும் அதிகாரிகளுடன் தெளிவாகக் கலந்துரையாடலாம்.

இல்லாவிட்டால் அமைச்சில் கலந்துரையாட விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்என அவர்மேலும் தெரிவித்தார். (4-5-104)



தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற பிரதி சபாநாயகருமாகிய அமரர் சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு ஜனன தினத்தை முன்னிட்டு கரவெட்டி சோணப்பு பகுதியில் கடந்தஞாயிற்றுக்கிழமை மாட்டு வண்டி சவாரிப் போட்டி இடம் பெற்றது. (படம்: மகாலிங்கம்)

# யாழ்ப்பாணக் கல்லூரியில் 200 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியும் அதனது தாய்க் கல்வி நிறுவனமாகிய பற்றிக்கோட்டா செமினரியும் 1823 ஆம் ஆண்டு முதல் கடந்த 200 வருடங்களாக வழங்கிய கல்விப் பணியினையும் சமூகப் பணியினையும் நினைவு கொள்ளும் வகையிலும் கொண்டாடும் வகையிலும் பழைய மாணவர் வார நிகழ்வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

கல்லூரியின் முன்னாள் மற்றும் தற்போதைய நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள், கல்வித்துறை சார்ந்த ஆர்வலர்கள் அனைவரினையும் இந்த நிகழ்வுகளிலே கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (4-5)

# இளங்கலைஞர் மன்றத்தால் விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக கலையரங்கு நிகழ்வில் கலந்து கொள்வதற்கு கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள இளங்கலைஞர் மன்றத்திலோ அல்லது Illam Kalaignar Mandram எனும்முகநூல் தளத்திலோ தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும். விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 28 ஆம் திகதி ஆகும். (4-5)

## ஆலயத்தில் உறங்கிய

# ஐந்து பூசகர்களின் தொலைபேசிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள அம்மன் கோயிலொன்றின் மண்டபத்தில் உறங்கிக் கொண்டிருந்த 5 பூசகர்களின் ஐந்து கையடக்கத் தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 25 வயதான பூசகர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் திருடப்பட்ட கைத்தொலைபேசிகளின் பெறுமதி 10 லட்சம் ரூபாவிற்கும் அதிகமாகும்.

ஜூலை 8 ஆம் திகதி கோயிலில் நடைபெற்ற பூஜையின் பின்னர், பூசகர்கள் நள்ளிரவில் கோயில் மண்டபத்தில் தூங்கியதாக கூறப்பட்டுள்ளது.

அதிகாலை 4.15 மணியளவில் அவர்கள் கண் விழித்த போது, அவர்களது தொலைபேசிகள் காணாமல் போனது தெரியவந்தது.

5 பூசகர்களும் கையடக்கத் தொலைபேசிகளை தரையில் வைத்துவிட்டு உறங்கிக் கொண்டிருந்ததாகவும் அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் கைத்தொலைபேசிகள் திருடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (4-5)

# காட்டு யானைக்கு வீசிய வெடி வெடித்ததில் விரல்கள் இழப்பு

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் மக்களின் பயன்தரும் நிலங்களிலுள்ள தென்னை, வாழை மரங்களை காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளது. இதனை தடுப்பதற்கு யானை வெடி வீசிய குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை வவுனியா கள்ளிக்குளம் - சிதம்பரம் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைக் கூட்டம் தென்னை, வாழை போன்ற பயிர் நிலங்களை சேதப்படுத்தியுள்ளது. இதனை தடுப்பதற்கு யானை வெடி வீசிய குடும்பத் தலைவர் கையில் வெடி வெடித்து இரண்டு விரல்கள் அகற்றப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். தமது குடியிருப்பு மற்றும் பயிர் நிலங்களில் காட்டு யானையின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. அதை தடுத்து நிறுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டு நிற்கின்றனர். (4-5-299)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

கைதடி தெற்கு தென்கிழக்கு விவசாய சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி தெற்கு சைவ ஐக்கிய வாசிகசாலையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4-5-30)



எழுத்தாளர் சிவ.தணிகாசலம் எழுதிய "செவாலியார் இளவாலை அமுது" நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண் புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவசகண் பரிசோதனை முகாம் எதிர் வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் இடம் பெறவுள்ளது.

அதேபோன்று பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண் புரை சத்திரசிகிச்சை மேற் கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இலவச மருத்துவ முகாம் அன்றைய தினமே காலை 9 மணி தொடக்கம் வல்வெட்டித் துறை பிரதேச வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண் புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற் கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற் கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து), கிளிநொச்சி
## பணிநிலை வெற்றிடம்

எமது வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி / சம்பள அளவுத்திட்டம்.**

| | |
|---|---|
| I. பொது முகாமையாளர் 101/02. | வெற்றிடம் 1. 27580 - 520 X 10 - 555X10 - 38330 |
| II. களஞ்சியப் பொறுப்பாளர் 202/09. | வெற்றிடம் 1. 20200 - 250 X 10 - 260X10 - 25300 |
| III. வெளிக்கள உத்தியோகத்தர் 209/10. | வெற்றிடம் 1. 19745 - 225 X 10 - 250X10 - 24495 |
| IV. எழுதுநர் 302/12. | வெற்றிடம் 1. 18820 - 170 X 10 -185X10 - 22370 |
| V. சாரதி 312 /13. | வெற்றிடம் 1. 18360- 160 X 10 - 170X10 - 21660 |
| VI. மொத்த விற்பனை நிலைய களஞ்சிய தொழிலாளர் 316/15. | வெற்றிடம் 2. 17435 - 145 X10 - 160X10 - 20485 |
| VII. காவலாளி 315/16 | வெற்றிடம் 1. 16975 - 135 X 10 - 150 X10 - 19825 |
| VIII. அலுவலக உதவியாளர் 317/16 | வெற்றிடம் 1. 16975 - 135 X 10 - 150 X10 - 19825 |

❖ குறிப்பு :- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபங்களுக்கு அமைய மேற்படி பதவிகளுக்கு ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**02. தகைமைகள் (சுற்றுநிருபம் 01/2021)**

**1. பொது முகாமையாளர் 101/02**

அ) கூட்டுறவு ஊழியர் 3 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 4 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் / அதற்குச் சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல் வியாபாரப் புள்ளிவிபரவியல். / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். / இலங்கைத்தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். / க.பொ.த.உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 11 ஆண்டு கால அனுபவம்.

**2. களஞ்சியப் பொறுப்பாளர் 202 / 09**

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் கொள்வனவு உத்தியோகத்தர் / கிளை மேற்பார்வையாளர் /கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வழங்கல்/களஞ்சிய முகாமை சந்தைப்படுத்தல் முகாமை தொடர்பான டிப்ளோமா சித்தி. அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் / க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**3. வெளிக்கள உத்தியோகத்தர் 209/10**

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில்/எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில்/எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறை தொடர்பான (கூட்டுறவு நிறுவன தொழிற்பாட்டிற்கேற்ப) பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 02 ஆண்டு கால அனுபவம். /க.பொ.த.உயர்தரப் பத்திரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**4. எழுதுநர் 302/12**

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர் / கணக்காய்வு எழுதுநர் /காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் எழுதுநர் / காசாளர் / கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் / பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல் / கணக்குப்பதிவியல் தொடர்பான பயிற்சிநெறிக்கான சான்றிதழ். அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

ஈ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. /க.பொ.த சாதாரண் தரப்பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**5. சாரதி 312/13**

அ) 05 ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து / லொறி / பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**6. மொத்த விற்பனை நிலைய களஞ்சிய தொழிலாளர் 316/15 - 02**

அ) கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத் திட்டப் பதவியில் களஞ்சியத் தொழிலாளர் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) 05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**7. அலுவலக உதவியாளர் 317/16**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம். / 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**8. காவலாளி 315/16**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.அல்லது

ஆ) 05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**03 பொதுவான நிபந்தனைகள்**

1.வயதெல்லை 18 - 45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

2.கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.

3.தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ். மேலதிக கல்வித் தகைமைச் சான்றிதழ். மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ். சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ். பிறப்புச் சான்றிதழ். வதிவிடச் சான்றிதழ். தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

4.மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்டதிட்டங்களுக்கு அமைய உரிய பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.

5.பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் சான்றிதழ்கள். பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**05. விண்ணப்பிக்கும் முறை**

➢ மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை தலைவர். வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். 155 ஆம் கட்டை. A 9 சாலை. கிளிநொச்சி. என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதவித் தபால் மூலமாகவே சமர்ப்பிக்க வேண்டும்.

➢ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**06. விண்ணப்ப முடிவு திகதி :- 2023.07.27**

**தலைவர்,**
**வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி.**
**2023.07.12**

(சி-6902)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கறிகளின் விலை உயர்வால் நாட்டில் மூடப்படும் கடைகள்



(கொழும்பு)

நாட்டில் மரக்கறிகளின் விலை உயர்வு காரணமாக 75 சதவீதமான சிறியளவிலான சில்லறை மரக்கறி விற்பனைக் கடைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது .

கடந்த மாதங்களில் பெரும்பாலான மரக்கறிகளின் விலை 100 சதவீதத்தால் அதிகரித்ததால் மரக்கறிகளின் தேவை குறைந்ததாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் காய்கறிகள் விற்பனை செய்யப்படாததால் பழுதடையும் மரக்கறிகளை தினமும் அகற்ற வேண்டியிருப்பதாகவும் சில்லறை மரக்கறி வியாபாரிகளில் அதிகமானோர் கடைகளை மூடியுள்ளதாகவும் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

மிகவும் வறண்ட காலநிலை, பலத்த மழை மற்றும் சில பகுதிகளில் காற்றுடன் கூடிய நிலை காரணமாக மரக்கறி அறுவடைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## வினய் மோகன் குவத்ரா-ரணில் சந்திப்பு



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இலங்கையை வந்தடைந்தார்.

இந்நிலையிலேயே இந்திய வெளியுறவு செயலாளர் வினய் மோகன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பு அமைச்சில் நேற்று சந்தித்தார். (நி)

## இந்தோனேசியாவுடன் வர்த்தக ஒப்பந்தம்

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இந்தோனேசியாவுடன், முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு, நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன, இந்தோனேசியாவுடன் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். (நி)

# பாரதம்

## முகநூல் தரிசனம் 163

### ஒருவருக்கு எதுவும் எப்போதும் நிரந்தரமில்லை



ஒரு ஊரில் ஒரு செல்வந்தன் இருந்தான்.

அவன் வியாபார நிமித்தமாக வெளியூர் சென்று திரும்பிய போது அவனது அழகான பெரிய பண்ணை வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அந்த ஊரிலேயே மிகவும் அழகான வீடு அவனுடையது தான். அந்த வீட்டை இரண்டு மடங்கு விலை கொடுத்து வாங்க பலரும் தயாராக இருந்தனர். ஆனால் இவன் விற்கவில்லை. இப்போது அந்த வீடு அவன் கண் முன்னே எரிந்துகொண்டிருந்தது. ஆயிரம் நபர்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள். தீ முழுவதுமாக பரவிவிட்டதால் அதை அணைத்தும் பிரயோஜனம் இல்லை என்று எந்த முயற்சியும் எடுக்கவில்லை. வணிகனோ செய்வதறியாமல் கண்ணில் நீரோடு புலம்பிகொண்டிருந்தான். ஐயோ என் வீடு..!!! என் வீடு...!! என்று அலறினான்.

அப்போது அவனின் மூத்த மகன் ஓடிவந்து ஒரு விடயத்தை சொல்கிறான் "தந்தையே ஏன் அழுகிறீர்கள்? இந்த வீட்டை நான் நேற்றே மூன்று மடங்கு இலாபத்திற்கு விற்றுவிட்டேன். இதனால் நமக்கு நஷ்டம் இல்லை " என்று கூறினான். இதை கேட்ட வணிகனுக்கு ஏக மகிழ்ச்சி. அவனது சோகம் அனைத்தும் மறைந்து மகிழ்ச்சி உண்டானது. இப்போது வணிகனும் கூடி இருந்த கூட்டத்தில் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்க தொடங்கினான். அதே வீடு தான், அதே நெருப்பு தான் ஆனால் சில விநாடிகளுக்கு முன் இருந்த தவிப்பும் சோகமும் இப்போது அவனிடம் இல்லை.

சிறிது நேரத்தில் வணிகனின் இரண்டாவது மகன் ஓடி வந்து "தந்தையே ஏன் இப்படி கவலையில்லாமல் சிரிக்கிறீர்கள்? நாங்கள் விற்ற இந்த வீட்டிற்கு முற்பணம் மட்டுமே வாங்கியுள்ளோம். முழு தொகை இன்னும் வரவில்லை. வீட்டை வாங்கியவன் இப்போது மீதி பணத்தை தருவானா என்பது சந்தேகமே" என்றான். இதை கேட்ட வணிகன் அதிர்ச்சி அடைந்தான். மீண்டும் சோகத்தில் ஆழ்ந்தான். கண்ணீரோடு மீண்டும் புலம்ப ஆரம்பித்தான். தனது உடைமை எரிகிறதே என்ற எண்ணம் மீண்டும் அவனை வாட்டியது.

சில மணித்துளிகள் பின்பு வணிகனின் மூன்றாவது மகன் ஓடி வருகிறான். "தந்தையே கவலை வேண்டாம். இந்த வீட்டை வாங்கிய மனிதன் மிகவும் நல்லவன் போலும். இந்த வீட்டை வாங்க அவன் முடிவு செய்தபோது வீடு தீ பிடிக்கும் என்று உங்களுக்கும் தெரியாது எனக்கும் தெரியாது. ஆகையால் நான் பேசியபடி முழு தொகையை கொடுப்பது தான் நியாயம் என்று என்னிடம் இப்போது தான் சொல்லி அனுப்பினான்" என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தான். இதை கேட்ட வணிகனுக்கோ ஏக சந்தோஷம். கடவுளுக்கு நன்றி சொல்லி ஆடிப்பாடி மகிழ்ந்தான். கண்ணீரும் சோகமும் மீண்டும் காணாமல் போய்விட்டது. மீண்டும் கூட்டத்தில் ஒருவனாக நின்று வேடிக்கை பார்க்க தொடங்கினான்.

இங்கு எதுவுமே மாறவில்லை. அதே வீடு, அதே நெருப்பு, அதே இழப்பு. இது என்னுடையது என்று நினைக்கும் போது அந்த இழப்பு உங்களை சோகத்தில் ஆழ்த்துகிறது. இது என்னுடையது அல்ல என்று நினைக்கும் போது உங்களை சோகம் தாக்குவது இல்லை. எனக்கு சொந்தமானது என்ற எண்ணம் தான் பற்று. உலகில் எதுவுமே நிரந்தரமானது இல்லை. ஒருவனுக்கு மட்டுமே சொந்தமானது இல்லை. அனைத்துமே அழியக் கூடியது. நான் உட்பட எல்லாமே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின் அழியக்கூடியது அல்லது வேறு ஒருவனுக்கு சொந்தமாக கூடியது என்பதை நாம் நினைவில் நிறுத்தினாலே போதும். அந்த எண்ணமே பற்றற்ற நிலை.

# ஆந்திராவில் பேருந்து விபத்

## 7 பேர் உயிரிழப்பு, 45

(டில்லி)

**ஆந்திராவில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 45 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

ஆந்திர மாநிலம் திருப்பதியில் இருந்து சித்தூர் நோக்கி தனியார் ஆம்னி பேருந்து ஒன்று பயணிகளுடன் வந்து கொண்டிருந்தது. 50 பயணிகளுடன் வந்த இப்பேருந்து நேற்று பக்ரபெட்டா என்ற பகுதியில் சென்று கொண்டிருந்த போது 50 அடி பள்ளத் தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் 45 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும் காயமடைந்த அனைவருக்கும் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து விசாரணை செய்த திருப்பதி பொலிஸ் கண்காணிப்பாளர், "திருப்பதியில் இருந்து 25 கி.மீ தொலைவில் உள்ள பாக்ரமெட்டா என்னும் இடத்தில் பேருந்து கவிழ்

## வட இந்தியாவில் தொடரும் அடைமழை மேலும் ஏழு பேர் உயிரிழப்பு



(டில்லி)

வட இந்தியாவில் அடைமழை காரணமாக உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

வார இறுதியில் பெய்த கடும்மழையைத் தொடர்ந்து தலைநகர் புதுடில்லியில் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. 40 ஆண்டில் பார்க்காத மழையைப் புதுடில்லி சந்தித்தது.

இமயமலையை ஒட்டிய மாநிலங்களான இமாசலப் பிரதேசத்திலும் உத்தர காண்டிலும் வீடுகளைவிட்டு வெளியே செல்வதை இயன்றவரை தவிர்க்கும்படி பொதுமக்களை அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

இமாசலப் பிரதேசம், உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சுமார் 22 பேர் உயிரிழந்ததாக ரைம் ஒப் இந்தியா ஏடு கூறியது. (நி-5)

## அட்லாண்டிக் பெருங்கடலில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(வோஷிங்டன்)

வடக்கு கரீபியன் அருகே உள்ள அட்லாண்டிக் பெருங்கடலில் 6.6 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த நிலநடுக்கம் ஆறு மைல் கிலோமீற்றர் ஆழத்தில், ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

நிலநடுக்கம் ஆன்டிகுவா மற்றும் பார்புடாவிற்கு வட கிழக்கே சுமார் 170 மைல் (270 கிலோமீற்றர்) தொலைவில் அமைந்துள்ளது.

இதன் தாக்கம் புவேர்ட்டோ ரிக்கோ உட்பட பல தீவுகளில் உணரப்பட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மேலும் நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (நி-5)

## ஒடிசாவில் ஏஐ செயற்கை செய்

(டில்லி)

இந்தியாவில் ஒடிசா மாநிலத்தில் ஓடிவி என்ற தனியார் தொலைக்காட்சி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் லிசா என்ற மெய்நிகர் செயற்கை செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ளது.

அச்சு அசலான இளம்பெண் வடிவத்தில் தோற்றமளிக்கும் அந்த செயற்கை நுண்ணறிவு செய்தி வாசிப்பாளர், ஆங்கிலம் மற்றும் ஒடியா மொழிகளில் செய்திகளை வாசிக்கும் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

தலைநகர் புவனேஸ்வரில் இதற்கான அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. தொலைக்காட்சி ஊடகத் துறையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள ஓடிவி நிறுவனம், அதிவேக தொழில்நுட்ப வளர்ச்சியை கருத்தில் கொண்டும், காலத்தின் தேவைக்கு ஏற்பவும் இந்த மெய்நிகர் செயற்கை செய்தி வாசிப்பாளரை அறிமுகம் செய்துள்ளது.

மெய்நிகர் செயற்கை செய்தி தொகுப்பாளினி லிசாவை அறிமுகம் செய்து வைத்த பிறகு அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஜகி மங்கத் பாண்டா கருத்து தெரிவிக்

## எவரெஸ்டைப் பார் 5 சுற்றுலாப் பயண

(காத்மண்டு)

உலகின் மிகப்பெரிய சிகரமான எவரெஸ்ட் சிகரத்தை பார்வையிடுவதற்காக 5 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் லாம்ஜூரா என்ற இடத்தில் விபத்துக்குள்ளானது.

நேற்று 5 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 6 பேருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...த்திற்குள்ளாகியதில் ...5 பேர் படுகாயம்



...ந்து விபத்திற்கு உள்ளாகியுள் ...ளது.

இதற்கு இப்பேருந்து ஓட்டுநரின் கவனக் குறைவே கார ணம்" எனத் தெரிவித்த னர். (நி-5)

## 32 ஆவது நாடாக நேட்டோவில் இணையவுள்ள சுவீடன்

(அங்காரா)

நேட்டோ அமைப்பில் சுவீ டன் இணைந்து கொள்வத ற்கு துருக்கி சம்மதம் தெரி வித்துள்ளது.

நேட்டோவில் புதிதாக நாடுகள் அங்கத்துவம் பெறு வதற்கு ஏற்கெனவே அங்கத் துவம் வகிக்கும் அனைத்து நாடுகளினதும் சம்மதம் தேவை.

எனினும், நேட்டோவில் சுவீடன் அங்கத்துவம் பெறுவதற்கு துருக்கி சம் மதம் தெரிவிக்க மறுத்து வந்தது.

குர்திஷ் கிளர்ச்சியாளர்க ளுக்கு சுவீடன் அடைக்கலம் கொடுத்தமையே இதற்குக் காரணம்.

இது தொடர்பாக பல





மாதங்களாக பேச்சுவார் த்தைகள் நடைபெற்று வந் தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுவீடனின் நேட்டோ அங்கத் துவத்துக்கு துருக்கி ஜனாதி பதி ரெஜெப் தையிப் ஏர்து வான் சம்மதம் தெரிவித் துள்ளார்.

இச்செய்தியினால் தான் மிகவும் மகிழ்ச்சியடைந்துள் ளதாக சுவீடனின் பிரதமர் உல் கிறிஸ்டர்ஸ்சன் தெரி வித்துள்ளார்.

நேட்டோவின் 32 ஆவது நாடாக சுவீடன் இணையவு ள்ளது. (நி-5)

## ...2 தொழில்நுட்ப உதவியுடன் ...செய்தி வாசிப்பாளர் அறிமுகம்



...கையில்,

"ஒரு காலத்தில் கணினி என்பது ஆச்சரியமான விடயமாக இருந்தது. ஆனால் காலம் மாறி, தற்போது இணையத்தில் அதிக நேரம் செல விடுகின்றனர்.

எனவே, காலப்போக்கில், தொலை க்காட்சி பத்திரிகையில் 25 ஆண்டு களை வெற்றிகரமாக நிறைவு செய் துள்ள எங்களது ஒடிவி தொலைக் காட்சியானது, ஒடிசாவின் முதல் செயற்கை நுண்ணறிவு செய்தி தொகுப்பாளரை அறிமுகப்படுத்தி மற்றொரு மைல்கல்லை அமைத்து ள்ளது.

"தொலைக்காட்சி ஒளி பரப்பில் ஏஜயின் பயன்பாடு இப்போதுதான் தொடங்கி யுள்ளது.

அதனால்தான், ஏஜ செய்தி தொகுப்பாளர் லிசா பல புதிய மைல்கற்களை உரு வாக்கத் தயாராகிவிட்டார். இந்த தொலைக்காட்சியின் மண்டல ஒளிபரப்பு அரங்கில் லிசா முதல் ஏஜயின் தொகுப் பாளர் மட்டுமின்றி முதல் ஒடியா செய்தி தொகுப்பாளர் ஆவார்," என்றும் அவர் தெரி வித்துள்ளார். (நி-5)

## 48 மாநிலங்களை 2 நாளில் கடந்து சாதனை படைத்த தோழர்கள்

(வோஷிங்டன்)

விமானிகளாகப் பணிபுரி யும் 2 நண்பர்கள் கின்னஸ் உலகச் சாதனையைப் படை த்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள 48 மாநிலங்களை விமா னம் வழி 1 நாள், 14 மணி நேரம், 13 நிமிடங்களில் கடந்ததாக என்டி.ரீ.வி தெரி வித்தது.

ஜான் ஸ்கிட்டோனும் ராபர்ட் ரேனொல்ட்சும் மே 17 ஆம் திகதியிலிருந்து 19 ஆம் திகதி வரை பயணம் செய்து சாதனை புரிந்தனர்.

இருவரும் அமெரிக்கா வைச் சேர்ந்தவர்கள். ஒவ் வொரு மாநிலத்திலும் அவர் கள் தரையிறங்கி மீண்டும்





உடனடியாகப் புறப்பட்டனர்.

இரு மாநிலங்களுக்கு இடையே ஆகக் குறுகிய தூரம் சுமார் 4 நிமிடங்கள்.

சாதிக்க வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்று வது, விமானப் போக்குவர த்தை ஊக்குவிப்பது, விமான த்தில் பயணம் செய்வது சுலபம் என்பதைக் காட்டு வது, மற்றவர்களிடையே பயணம் செய்வதை ஊக்கு விப்பது போன்ற காரணங் களுக்காக்ச் சாதனையில் இறங்கியதாக இருவரும் தெரிவித்தனர். (நி-5)

## ...ர்வையிட ஹெலிகொப்டரில் சென்ற ...ணிகள் உட்பட 6 பேர் உயிரிழப்பு

புறப்பட்ட ஹெலி கொப்டர் சில நிமிடங்களில் கட்டுப்பாட்டு அறை யுடன் இருந்த தொடர்பை இழந்தது.

இதையடுத்து ஹெலிகொப்டர் காணாமல் போனதாக ஊடகங்கள் செய்திகள் வெளியிட்ட நிலையில், பகன்ஜே கிராமத்தின் லம்ஜூரா வில் உள்ள சிஹந்தண்டா என்ற இடத்தில் ஹெலி கொப்டரின் சிதை ந்த பாகங்களும் 6 பேரின் உடல்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

ஹெலிகொப்டர் மலை மேல் உள்ள மரத்தில் மோதியதே விபத்துக்கு கார ணம் என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி-5)

## உக்ரைனிற்கான விநியோகங்களை கண்காணிக்க கண்காணிப்பு விமானத்தை வழங்குகிறது அவுஸ்திரேலியா





(கன்பரா)

அவுஸ்திரேலியா உக் ரைன் நடவடிக்கைகளி ற்கு ஆதரவாக ஜேர்மனி க்கு விசேட கண்காணிப்பு விமானத்தை வழங்கவுள் ளது.

உக்ரைனிற்கு இராணுவ மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை கண் காணிப்பதற்காக அவுஸ்தி ரேலியா கண்காணிப்பு விமா னத்தை வழங்கவுள்ளது.

ஜேர்மன் சான்சிலருடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்ட பின்னர் அவுஸ் திரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிஸ் இதனை அறி வித்துள்ளார்.

அவுஸ்திரேலிய விமா னப்படை ஈ-7ஏ வெட்ஜ்டெய்ல் விமானத்தை ஒக்டோபர் முதல் ஆறு மாதங்களிற்கு வழங்கவுள்ளது.

உக்ரைனிற்கு மிகவும் அவசியமான பன்னாட்டு விநியோகத்தை பாதுகாப்பத ற்காக இந்த விமானங்களை அவுஸ்திரேலியா வழங்க வுள்ளது.

ஜேர்மனியிலிருந்து இய ங்கும் இந்த விமானம் முன் கூட்டியே எச்சரிக்கைகளை வழங்குவதன் மூலம் தடை யற்ற விநியோகத்தை உறுதி செய்யும். (நி-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தடுமாறும் காலநிலைகேற்ப மாற்றம் விவசாய செய்கையில் வேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

காலநிலை (Climate) என்பது சூழலியல் காரணி. உயிரற்ற காரணிகளின் கூட்டமைப்பு இருந்தாலும் அதிலுள்ள காரணிகளின் சமநிலை குழம்பி ஒட்டுமொத்தமான காலநிலையையே குழப்பிவிட்டிருக்கின்றது. வெப்பநிலை எதிர்பாராத விதமாக அதிகரிக்க தொடங்கியிருக்கின்றது. வெயிலில் வெற்றுடலில் நின்றால் உடல் எரிகின்றது. வரப்பே தலகாணி வெற்றுடம்பே பட்டாடை என வாழும் நமது விவசாயப் பெருமக்களால் இந்த எரிவை தாக்குப்பிடிக்க முடியவில்லை. வெயில் ஏற முன்பு அனைத்து வேலைகளையும் செய்து சூரியன் உச்சம் தொடும் போது பிறவேலைகளை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு.

வளிமண்டல வெப்ப நிலையில் ஏற்படும் சிறிய அதிகரிப்பு கூட விதை முளைப்பதில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் பயிர் விளைந்து பூக்கும் காலத்தில் மகரந்தமணிகளில் அழற்சியை (Pollen sterility) ஏற்படுத்தி விடும். இதன் காரணமாக குறிப்பாக நெற்பயிரில் கதிர் உருவாவதில் பாதிப்பு ஏற்பட்டு நெற்கதிர்கள் பதராக (Chaffiness) மாறும் நிலையேற்பட்டு விடும். தொடர்ந்து வரும் காலப்பகுதியில் மழை பெய்தால் வெப்பநிலை குறைய பூஞ்சண நோய்களின் தொற்று ஏற்பட ஏதுவாகிவிடும்.

ஆய்வுகளின் தகவல்படி உலகளாவிய ரீதியில் ; வளிமண்டல வெப்பநிலை ஒவ்வொரு பாகை செல்சியஸினால் அதிகரிக்கும் போது நெற் பயிரில் 3.2 சதவீதம் விழுக்காடும் சோளத்தில் 7.4 சதவீதம் விழுக்காடும் கோதுமையில் 6 சதவீதம் விழுக்காடும் ஏற்படுவதாக அறிய முடிகின்றது. தற்போதைய கணக்கின் படி உலகளாவிய ரீதியில் நெல்லை உணவாக 21% கலோரி தேவைக்காக மக்கள் உணவாக்குகின்றனர். உலக உற்பத்தியில் பதினொரு சதவீதமான பயிர்ச்செய்கை நிலப் பகுதியில் நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. 2014ஆம் ஆண்டு 480 மில்லியன் தொன் ஆக இருந்த உலகளாவிய நெல் உணவு கொள்ளளவு 2030 ஆம் ஆண்டளவில் 550 மில்லியன் தொன் ஆக அதிகரிக்கும். இவ்வாறான உணவுத் தேவையின் அதிகரிப்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் உணவுற்பத்தியும் அதிகரிக்காது விடின் உணவுப் பஞ்சம் ஏற்படுவதனை எந்த வகையிலும் தடுக்க முடியாமல் போய்விடும்.

எமது நாட்டில் காலபோகம் மற்றும் சிறுபோகம் என இரண்டு போகங்களில் பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. தொடர்ச்சியாக நீர் அணைகளிலிருந்து கிடைக்கின்ற இடங்களில் மூன்று காலங்களிலும் தொடர்ச்சியாக நெற் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது. காலநிலை மாற்றத்தின் முக்கிய செயற்பாடாக மழை வீழ்ச்சியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வழக்கமாக பெய்கின்ற மழைவீழ்ச்சி குறித்த காலத்தில் கிடைப்பதில்லை. இத்னால் விவசாயிகள் விதைப்பதை, நாற்று நடுதலை காலந்தாழ்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். மழை வீழ்ச்சி மாற்றம் காண்பதனால் சரியான போகத்தில் நெற் செய்கை செய்ய முடியாமல் போய்விடுகின்றது. காலநிலை மாற்றத்தால் போகத்திலும் மாற்றம் கண்டிருக்கின்றது.

தேவையான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கும் காலத்துக்கு முன்கூட்டி கிடைக்குமாயின் விதைப்பதை முன்னாக செய்ய வேண்டியிருக்கும். ஆனால் அவ்வாறான மாற்றத்தை முன்கூட்டியே அனுமானிக்க முடியாதிருப்பதனால் விதைத்தது காய்ந்து விடுவதும் நாற்றுக்கள் கருகுவதுமான நிலை ஏற்பட்டு விடுகின்றது. பின்னர் மழை பெய்ய வேண்டிய நேரத்தில் அதிகமாக கிடைக்கும் போது தேவையான பயிரடர்த்தி வயலில் இல்லாது போய்விடும். இதனால் விளைச்சல் எதிர்பார்த்தளவு கிடைக்காது என்பதற்கப்பால் அதீத ஈரப்பதனும் குறைந்த இரவு நேர வெப்பநிலையும் விளைவிக்கும் பயிர்களில் நோய்த்தாக்கம் அதிகரிக்க வாய்ப்பாகி விடுகின்றது. காலபோகத்தில் கிடைக்க வேண்டிய மழை தப்பிதமானால் அதில் செய்யப்படும் பயிர்ச்செய்கை பாதிப்படையவே செய்யும். இந்த இடர் நிலையை நாம் துல்லியமாக அவதானிப்பதன் மூலமும் வானிலை ஆய்வின் மூலமும் விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக தகுந்த நேரத்தில் அறிவிப்பதன் மூலமும் எங்களூர் விவசாயத்தை காப்பாற்றிட முடியும்.

வழமையாக நெற்பயிரினங்களில் மட்டும் தங்கியிருக்காது அதிகரித்த வளிமண்டல வெப்பநிலைக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய நெற்பயிரினங்களை பயிரிட்டு இவ்வாறான தளம்பல்களுக்கு ஈடுகொடுக்க வழிவகை செய்தல் அவசியமாகின்றது. நெற்பயிர் மட்டுமல்ல ஏனைய பயிர்களுக்கும் இதே நிலைதான். இதனால் வெப்பநிலை அதிகரிக்க நீரின் தேவை அதிகரிக்கும். அவ்வாறு நீரின் தேவை அதிகரித்தால் அதனை ஈடு செய்ய நிலத்திலிருந்து அதிகளவு நீரை உறிஞ்சியெடுக்கும் நிலையும் ஏற்படும். நீர்த் தேவை அதிகமாக தேவைப்படாத பயிர்களை விவசாயிகளின் வருமானத்தில் பாதிப்பேற்படாத வகையில் பயிர் செய்யும் வாய்ப்புக்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கும் போது நிலம் விரைவில் காய்ந்து போவதனால் அடிக்கடி நீர்ப்பாய்ச்ச வேண்டிய தேவை ஏற்படுகின்றது. வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்கும் சிறிய இடப்பரப்பு ஆனாலும் அதே நிலைதான். ஆக மொத்தத்தில் நிலத்தடி நீரின் தேவை தற்போது அதிகரித்துள்ளது. வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பினால் பயிர்கள் விரைந்து வாடதொடங்குவதால் நீர்ப்பாய்ச்சும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது நீரின் தேவையை இரண்டு மடங்காக்கி விட்டுள்ளது.

வளிமண்டல வெப்பநிலையில் ஏற்படும் சிறிய அதிகரிப்பு கூட விதை முளைப்பதில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் பயிர் விளைந்து பூக்கும் காலத்தில் மகரந்தமணிகளில் அழற்சியை ஏற்படுத்திவிடும். இதன் காரணமாக குறிப்பாக நெற்பயிரில் கதிர் உருவாவதில் பாதிப்புஏற்பட்டுநெற்கதிர்கள் பதராகமாறும் நிலையேற்பட்டு விடும். தொடர்ந்துவரும் காலப் பகுதியில் மழை பெய்தால் வெப்பநிலை குறைய பூஞ்சண நோய்களின் தொற்று ஏற்பட ஏதுவாகிவிடும்.

நிலத்தடி நீரின் கொள்ளளவில் மாற்றமில்லை என்பதனால் அதனை நாம் கவனமாக பயன்படுத்தத் தவறினால் நாம் வாழும் பூமி வரண்டு போவதனை எந்த விதத்திலும் தடுக்க முடியாது. கிணற்றிலிருந்தோ அல்லது குழாய் கிணற்றிலிருந்தோ பம்பி மூலம் நீரை இலகுவாக பெறலாம் என்பதற்காக எதனையும் செய்யலாம் என நினைப்பது நன்றல்ல. நீர் பொதுச் சொத்து. அதற்கு நிறமுமில்லை மணமுமில்லை. ஒருவருக்கும் இது உமக்கு எமக்கு என பிரித்து கொடுக்கப்படவில்லை என்பத்னை புரிந்து கொள்ள மறுப்பதேன். நீரில் மாசு ஏற்பட்டால் அனைவருமே பாதிக்கப்படுவோம் என்பதனையும் பலர் புரிந்து கொள்வதில்லை.

நிலத்தடி நீரினை அதிகமாக நுகர்வதனால் பூமி அச்சிலிருந்து விலக தொடங்கியிருப்பதாக விஞ்ஞான தகவல். அச்சு நகர தொடங்கினால் அதன் விளைவு அபரிமிதமானது. இதனூடே நிலத்தடி நீரை வினைத்திறனாக பயன்படுத்தாமல் அதிகமுறுஞ்சும் எந்த வகையான திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் இருப்பதையும் இழக்கின்ற நிலைமையாகவே முடியும். உண்மையான கலியுகம் இனித்தான் ஆரம்பம் என்பதனை கட்டியங்கூறும் நிகழ்வுகள் கண்முன்னே காண்கின்றோம். அத்துடன் நாம் அனுபவிக்கவும் தொடங்கி விட்டோம். குடிப்பதற்கு இன்னோரன்ன தேவைகளுக்கு என பயன்படுத்துவதற்கு இருக்கும் நீரினை சரியான முறையில் பயன்படுத்தத் தவறினால் வரும் பேரழிவுக்கு நாங்களே காரணம். தற்போதுள்ள அதிகரித்த வளிமண்டல வெப்பநிலை அனைத்து உயிரினங்களுக்கும் ஆகாது. இது இப்படியே நின்று விடப் போவதில்லை. இது தான் ஆரம்பம் என்றால் பாருங்களேன். இனி வருங்காலம் வெப்பநிலை அதிகரித்து அதில் நாம் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவோம். தீமை வரு முன் இப்போதாவது காப்பதற்கு முயற்சியெடுப்போம்.

துல்லியமான முன் கூட்டிய காலநிலை அறிவிப்பு (Weather forecasting) இனிவரும் விவசாய செய்கைக்கு மிகவும் அவசியம் வரும். ஆனால் வராது என இனியும்சாக்குப்போக்கு சொல்ல முடியாது. இதற்காக வளிமண்டல திணைக்களத்து காலநிலை அவதானிப்பினை மிக துல்லியமாக . கணிக்கும் நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். வடமாகாணத்திற்கென காலநிலை அவதானிப்பு மற்றும் ஆய்வு மையம் அவசியம் தேவை. வளிமண்டல காரணிகளை துல்லியமாக அளவிடும் பகுத்தறியும் மிகச் சிறந்த கருவிகளின் தேவை அவசியம் இதற்குண்டு.

கணனி மயமாக்கப்பட்ட அவதானங்களை முன்கூட்டியே விவசாயப் பெருமக்களுக்கு தெரிவிப்பதன் அவசியத்தைப் புரிந்து கொண்டு இனிவரும் பயிர்ச்செய்கைக்கான முன்னறிவிப்பை இத்தகைய தகவல்களின் அடிப்படையில் செய்யத் தவறினால் நாம் பயிர்ச்செய்கையில் இழப்புக்களை தொடர்ந்து சந்திக்க வேண்டிய நிலையேற்படும். இது விவசாய பெருமக்களை மேலும் வறுமை நிலைக்குள்ளாக்கும். எமக்கிருக்கின்ற வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தும் அதேவேளையில் அவற்றை அதிகமாக சுரண்டும் எந்த வகை தொழில் வாய்ப்புக்களுக்கு முன்னுரிமை வழுங்கலாகாது. குடிநீர் கல்சியம் அதிகரித்து கடுமையானதாக மாறிக் கொண்டிருக்கின்றது. இந்நிலை தொடர்ந்தால் குடிப்பதற்கும் நீர் இருக்காது. எடுப்பதற்கும்நீர்போதாது. இருக்கின்ற நிலத்தடி நீரை பக்குவமாக பயன்படுத்தி எமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதே மேல். அத்துடன் பயிர்ச்செய்கையிலும் நீரில் கிடைக்கும் தன்மையை புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் பயிர்ச்செய்கை உத்திகளை மாற்றுவதும் பயிர்ச்செய்கையில் ஏற்படும் இழப்பினை தவிர்த்துக் கொள்ளலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகள் நலன்புரி சங்கம் ஊடாக போராளிகளுக்கு உதவி செய்யுங்கள்

## புலம்பெயர் உறவுகளிடம் கோரிக்கை

(நெளுக்குளம்)

புலம்பெயர் தேசங்களில் இருப்பவர்கள் போராளிகளுக்கு உதவி செய்வதாக இருந்தால் போராளிகள் நலன்புரி சங்கத்திற்கு உதவி செய்யுங்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் முதலாவது அலுவலகமானது அண்மையில் வவுனியாவில் திறந்து வைக்கப் பட்டது.

குறித்த நிகழ்வில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து மேலும் கருத்து தெரிவிக்கையில்,

போரிலே பல உயிர்களை தியாகம் செய்த போராளிகளின் மதிப்பு, மரியாதை இழந்து நிற்கின்ற ஒரு தேசத்திலே சமூகங்கள் எங்களை புறக்கணிக்கின்ற நிலை தொடர்ந்து இருக்கின்றது.

தங்களை அர்ப்பணித்தவர்கள் எங்களுடைய சமூகத்தினாலே ஒதுக்கப்படுகின்ற அவல நிலை என்பது என்றுமே ஈடு செய்ய முடியாத துக்கமான நிலையாக தான் இருக்கும்.

போராளிகள் இன்றும் சொல்லொண்ணா துன்பத்தோடு வறுமையில் வாடுகின்ற நிலை காணப்படுகிறது. போராளிகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களை எங்களுடைய சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பல அரசசார்பற்ற நிறுவனங்கள், அமைப்புகள் உருவாகி பல உதவிகளை செய்து வருகின்றன. ஆனால் அவ் உதவிகள் முழுமையாக போராளிகளுக்கு சென்றடைவதாக அறிய வில்லை.

புலம்பெயர் உறவுகளிடம் ஊடகங்கள் ஊடாக ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். உதவி செய்வதாக இருந்தால் போராளிகள் நலன்புரி சங்கத்திற்கு உதவி செய்யுங்கள்.

ஏனென்றால் அவர்களுக்கு தான் தெரியும் எங்கெங்கு போராளிகள் கஷ்டப்படுகிறார்கள், எங்கே அவர்கள் மோசமான நிலையில் உள்ளார்கள் என்பது இவர்கள் தான் அதனை காணக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். (4-5-299)

# போராளிகள் நலன்புரிச் சங்க அலுவலகம் தொடர்பில் விசாரணை

(வவுனியா)

வவுனியா தேக்கவத்தையில் திறந்து வைக்கப்பட்ட போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணை செய்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக கூறியுள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் நலன் சார்ந்து உருவாக்கப்பட்ட போராளிகள் நலன்புரிச் சங்க அலுவலகம் அண்மையில் திறக்கப்பட்டது.

அலுவலகம் திறக்கப்பட்ட போது, அன்டன் பாலசிங்கம், தமிழ்ச் செல்வன், அரசியல் துறைத் தலைவர் சிவகுமார் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

டெலோ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (4-5)



கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.முரளிதரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைபொறுப்பேற்றுக்கொண்டார். (படம்:-தேவானந்தன்)



மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பரிசீலனை மற்றும் அணிவகுப்பு மரியாதை நிகழ்வு நேற்று திங்கட்கிழமை மன்னார் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் மன்னார் தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.பி.ஜெயதிலக்க தலைமையில் இடம்பெற்றது. (படம்:-ஜோசப்நயன்)

# நிலக்கடலை உற்பத்தியை ஊக்குவிக்க இயந்திரங்கள்




(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் ஏழு களை கட்டும் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த காலங்களை விட அதிகளவான விவசாயிகள் நிலக்கடலை செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவ்வாறன நிலையில் நிலக்கடலை செய்கையினை மேம்படுத்தும் வகையில் வன்னி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தினால் களை சாறும் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட முத்துவிநாயகர்புரம் நிலக்கடலையாளர் உற்பத்தி சங்கத்திற்கு நான்கு இயந்திரங்களும் முத்தயன் கட்டு நிலக்கடலை உற்பத்தியாளர் சங்கத்திற்கு மூன்று இயந்திரங்கள் அடங்கலாக ஏழு இயந்திரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-315)



2023 ஆம் ஆண்டிற்கான அகில உலக பளு தூக்கல் போட்டிக்காக இலங்கையின் வடமாகாணம் வவுனியாவிலிருந்து 40கிலோ எடை பிரிவில் 16 வயதையொட்டிய வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி கோசியா திருமேனன் தெரிவாகி எதிர்வரும் 16 ஆம் திகதிவரை டெல்லியில் நடைபெறவுள்ள போட்டியில் பங்கேற்கவுள்ளார். இவர் ஞானஜீவன் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் போட்டிக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (படம் - சதீஸ்)



முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் உத்தியோகத்தர்களின் உள மற்றும் ஆளுமையை மேம்படுத்தும் முகமாக மாவட்டச் செயலக பயிற்சிப் பிரிவினால் "சுய மற்றும் சமூக நிலை ஆய்ந்து நோக்கலும் ஒன்றிணைத்தலும்" எனும் தலைப்பில் யோகா மற்றும் அரங்காற்றுகையுடன் இணைந்த இரு நாட்கள் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நேற்று மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இந்தப் பயிற்சியானது இன்றும் இடம்பெறவுள்ளது.




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 300 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 750 | 600 | 800 | 800 |
| தக்காளி | 600 | 500 | 500 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 240 | 200 | 300 |
| கோவா | 300 | 250 | 300 | 300 |
| கரட் | 360 | 480 | 500 | 500 |
| பூசணி | 120 | 100 | 100 | 140 |
| புடோல் | 180 | 180 | 200 | 240 |
| வாழைக்காய் | 180 | 150 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 500 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 | 150 |
| பாகற்காய் | 450 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 320 | 320 | 300 | 300 |
| பீற்றூட் | 450 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 350 | 380 | 450 | 450 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | 300 | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 250 | 300 | 500 |
| முள்ளங்கி | 160 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 120 | 150 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 227





அப்போது சஞ்சீவி மலையிலிருந்து சில மூலிகைகள் கோடிக்கரைக் காட்டில் விழுந்தபடியால் தான் அங்கே இன்றைக்கும் நல்ல மூலிகைகள் கிடைக்கின்றன. இலங்கையில் சஞ்சீவி பர்வதமே இருந்தபடியால் அங்கே இன்னும் அபூர்வமான மூலிகைகள் கிடைக்கும் அல்லவா? நான் எதிர்பார்க்கும் மூலிகைகள் மட்டும் கிடைத்து விட்டால், சக்கரவர்த்தியின் நோயை நானே கட்டாயம் குணப்படுத்தி விடுவேன்.."

"கடவுள் கிருபையினால் அப்படியே ஆகட்டும். இப்போது அந்த வாலிபர்கள் இருவரும் எங்கே?"

"உள்ளே இருக்கிறார்கள், அம்மா! பிரயாணத்துக்கு ஆயத்தமாகத் தங்களிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்படக் காத்திருக்கிறார்கள்!"

தலைமை மருத்துவர் அழைத்துச் செல்ல இளவரசிகள் இருவரும் ஆதுரசாலைக்குள் சென்றார்கள். அங்கே தாழ்வாரங்களில் மருந்து வாங்கிக் கொண்டு வந்தவர்களையும் மருந்துக்காகக் காத்திருப்பவர்களையும் பார்த்துக் கொண்டு நடந்தார்கள். அவர்கள் அனைவரும் குந்தவைப்பிராட்டியைப் பார்த்ததும் அகமும் முகமும் மலர்ந்து இவ்வளவு நல்ல மருத்துவ சாலையைத் தங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததற்காக இளவரசியை வாழ்த்தினார்கள்.

தலைமை மருத்துவரின் அறையில் இருவர் காத்திருந்தனர். அவர்களில் நம் வந்தியத்தேவன் புதிய முறையில் உடை அணிந்திருந்ததைப் பார்த்து இளையபிராட்டி புன்னகை பூத்தாள். வானதிக்கும் அவ்வீரனை ஒருவாறு அடையாளம் தெரிந்து விட்டது. குந்தவையின் காதோடு, "அக்கா! குடந்தை ஜோதிடரின் வீட்டில் பார்த்தவர் மாதிரி இருக்கிறதே!" என்றாள்.

"அவர் மாதிரிதான் எனக்கும் தோன்றுகிறது. ஜோதிடரைப் பார்த்த பிறகு வைத்தியரிடம் வந்திருக்கிறார். உன் மாதிரியே இவருக்கும் ஏதாவது சித்தக் கோளாறு போலிருக்கிறது!" என்று சொல்லிவிட்டு, வந்தியத்தேவனைப் பார்த்து, " ஏன் ஐயா! சக்கரவர்த்தியின் உடல் நலத்துக்காக மூலிகை கொண்டு வருவதற்கு இலங்கைக்குப் போக ஒப்புக் கொண்டவர் நீர்தானா?" என்று கேட்டாள்.

வந்தியத்தேவனுடைய கண்களும் கண்ணிமைகளும் வேறு ஏதோ இரகசிய பாஷையில் பேசின. அவன் வாயினால், "ஆம், இளவரசி! நான்தான் இலங்கைக்குப் போகிறேன்: ஒருவேளை அங்கு இளவரசரைப் பார்த்தாலும் பார்ப்பேன். அவருக்கு ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமா?" என்று கேட்டான்.

"பார்த்தால் அவசியம் இந்தச் செய்தியைச் சொல்லுவீர். கொடும்பாளூர் இளவரசி வானதிக்கு உடம்பு சரியாகவே இல்லை. அடிக்கடி நினைவு இழந்து மூர்ச்சை போட்டு விழுகிறாள். இளவரசியைச் சுயப் பிரக்ஞையோடு பார்க்க வேண்டுமானால் உடனே புறப்பட்டு வர வேண்டும் என்பதாகத் தெரிவிக்க வேண்டும்" என்றாள் இளையபிராட்டி.

"அப்படியே தெரிவிக்கிறேன், அம்மணி!" என்று கூறி வந்தியத்தேவன் வானதியை நோக்கினான்.

குந்தவையின் வார்த்தைகளைக் கேட்டதும் உண்டான நாணத்தினால் வானதியின் இனிய முகம் இன்னும் பன் மடங்கு அழகு பெற்றுப் பொலிந்தது. பொங்கி வந்த நாணத்தையும் கூச்சத்தையும் சமாளித்துக் கொண்டு வானதி தட்டுத் தடுமாறி, "ஐயா! அப்படியொன்றும் தாங்கள் சொல்லி விட வேண்டாம். ரொம்பவும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். கொடும்பாளூர் வானதி, இளையபிராட்டியின் போஷணையில் தினம் நாலு வேளை உண்டு உடுத்துச் சுகமாக இருப்பதாகத் தெரியப்படுத்துங்கள்" என்றாள்..

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி புலவரும் நெல்மணிகளும்



அது ஒரு அழகிய கிராமம். அந்த கிராமத்தில் ஒரு திறமை வாய்ந்த புலவர் ஒருவர் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

சில மாதங்களுக்கு பிறகு, அவரது குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது மேலும் இதிலிருந்து மீள்வதற்கு என்ன செய்வதென்று புலவர் யோசித்துக் கொண்டு இருந்தார்.

புலவரின் நிலையைப் பார்த்த அந்த கிராமத்தின் தலைவர் புலவரிடம் சென்று, "நம் நாட்டின் அரசர் தன்னை புகழ்ந்து பாடும் புலவருக்கு கேட்கும் பரிசினை கொடுக்கிறார்.அந்த பரிசினைப் பெறுவதற்கு நீயும் முயற்சிக்கலாமே" என்று கூறினார்.

இது சரியான தருணம் என்று கருதிய புலவரும் மன்னரைப் பார்க்க அரண்மனை நோக்கி பயணித்தார்.

மன்னரைப் புகழ்ந்து பாடுவதற்காக சென்ற புலவர் அரண்மனையை அடைந்தார். மன்னரைப் பற்றியும், அவரது ஆட்சி பற்றியும் புகழ்ந்து பாடினார்.

புகழ்ந்து பாடிய புலவரின் பேச்சில் மகிழ்ச்சி அடைந்த அரசன் புலவனிடம், "உனக்கு என்ன பரிசு வேண்டுமோ கேள்" என கூறினார்.

புலவரும் [illegible] போன்ற வறுமை எப்பொழுதும் என் குடும்பத்தை பாதிக்கக்கூடாதென்று யோசித்தார். பின்னர் அரண்மனையில் ஒரு சதுரங்க பலகை இருப்பதைப் பார்த்தார். "அரசே எனக்கு பெரிதாக எதுவும் வேண்டாம் அங்கே சதுரங்க பலகை ஒன்று இருக்கிறதல்லவா அதில் 1ம் கட்டத்தில் ஒரு நெல்மணியை வைத்த பின் ஒவ்வொரு கட்டத்திற்கும் அதனை இரட்டிப்பாக [illegible] பரிசாக ஏற்றுகொள்வேன்" என்று கூறினார். மன்னர் புலவரைப் பார்த்து, "நெல் மணிகள் போதுமா? தங்கம், வைரம் போன்ற விலை உயர்ந்த பொருட்கள் வேண்டாமா?" என்று கேட்டார்.

புலவரோ "அரசே எனக்கு நெல்மணிகள் மட்டும் போதும்" என்று கூறிவிட்டார்.

பொன்னோ பொருளோ கேட்பார் என எண்ணியிருந்த அரசனும் புலவனை எள்ளி நகையாடி சரி என கூறி விட்டார். பின்னர் அரசர் அரண்மனை சேவகர்களிடம், "புலவர் கேட்ட நெல் மணிகளை எடுத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார். சேவகர்களும் சதுரங்கப் பலகையில் புலவர் கூறியபடியே நெல் மணிகளை சதுரங்க பலகையின் மேல் அடுக்கினர்.

1ம் கட்டத்தில் 1, 2ம் கட்டத்தில் 2, 3ம் கட்டத்தில் 4, 4ம் கட்டத்தில் 8 என நெல் மணிகளை அடுக்கினர்.

10ம் கட்டத்தில் வந்த போது நெல் மணிகளின் எண்ணிக்கை 512 என ஆனது.

20ம் கட்டத்தில் வந்த போது நெல் மணிகளின் எண்ணிக்கை 5,24,288 என அதிகரித்தது.

பாதி தூரம் அதாவது 32வது கட்டத்தை அடைந்த போது நெல்மணிகளின் எண்ணிக்கை 214,74,83,648 ஆக பெருகியது.

விரைவில் நெல் மணிகளின் எண்ணிக்கை கோடான கோடிகளை தாண்டியது. இதனால் அரசன் தன் ராஜ்ஜியம் முழுவதையும் அந்த புத்திசாலி புலவரிடம் இழக்கும் நிலை ஏற்பட்டது.

புலவரின் புத்திசாதுரியத்தையும், தான் செய்த தவறை உணர்ந்த அரசர் புலவரிடம் மன்னிப்பு கேட்டார்.

இந்த ராஜ்யத்தை ஆள்வதற்கு என்னை விட இந்த புலவருக்கு அதிக திறமை உள்ளது என்று சபை முன் கூறிவிட்டு அரசர் பதவியை புலவரிடம் ஒப்படைத்தார்.

நீதி: கூட்டுப்பலனின் பெருக்கும் சக்தியை எப்பொழுதும் குறைத்து மதிப்பிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு எறும்புகளைப் போல உபதேசிப்பவர் யாருமில்லைஅந்த எறும்புகளோ பேசுவது இல்லை.

– ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் மோடியை சிக்கெனப் பிடியுங்கள்

*... யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவ தினியே*

என்று திருவாசகத்தில் மனமுருகிப் பாடுவார் மணிவாசகர்.

அதனாலன்றோ திருவாசகத்தைத் தேன் என்று நம்மவர்கள் போற்றித் துதி செய்தனர்.

இங்கு மணிவாசகர் கூறுகின்ற சிக்கெனப் பிடித்தல் என்பதன் பொருள் உணர்தல் அவசியம்.

பொதுவில் மனித உறவும் நட்பும் பலவிதம். வீதியில் கண்ட பழக்கத்தில் ஏற்பட்ட நட்பு. பாடசாலையில் ஒன்றாக ஒரு வகுப்பில் இருந்து கற்றதனால் ஏற்பட்ட நட்பு. பல்கலைக்கழகம், உத்தியோகம் சார்ந்து உருவான பழக்கம் என, நட்பும் உறவும் பலவாறு அமையவல்லவை.

இவற்றுள் பாடசாலை நட்பு என்பது ஏனையவற்றைவிட வலிமையானது.

அதாவது உரிமையுடன் நட்புப் பாராட்டுகின்ற அளவில் அது உயர்ந்தது.

அதே நேரம் ஒரு பயணத்தின்போது ஏற்பட்ட நட்பு அந்தப் பயணத்தோடு முடிந்து போகலாம்.

சிலவேளை கண்ட இடத்தில் தலை அசைப்பதோடு அது முடிந்து விடலாம்.

ஆக, நட்பு ஆழமாகவும் நடுத்தரமாகவும் சாதாரணமானதாகவும் இருக்க முடியும் என்பது தான் கவனிக்கப்பட வேண்டியது.

இந்த நட்பின் வகைமையைப் புரிந்து கொள்வதனூடு மணிவாசகர் கூறுகின்ற சிக்கெனப் பிடித்தல் என்பதன் பொருளை உணர்ந்து கொள்ள முடியும்.

இறைவனைச் சிக்கெனப் பிடித்தல் வேண்டும். அதாவது முழுவதும் நீதான் உன்னையே நான் நம்பியுள்ளேன். நீ என்னைக் கைவிடமாட்டாய் என்பதில் நூறு வீத நம்பிக்கையோடு இருக்கிறேன்.

ஆகையால் என்னைக் காப்பாற்றாமல் – ஆட்கொள்ளாமல் நீர் விலகிச் செல்ல முடியாது என்பதையே சிக்கெனப் பிடித்தல் என்பதன் பொருள் உணர்த்தி நிற்கிறது.

மணிவாசகர் கூறிய சிக்கெனப் பிடித்தல் என்ற சொற்பதத்தை இப்போது நாம் நிதர்சனமாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஆம், எங்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய வல்லமையும் அதனை சர்வதேச நாடுகள் அங்கீகரிக்கக் கூடிய நிலைமையும் இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு மட்டுமே உண்டு.

ஆகையால் பிரதமர் மோடியை தமிழ் மக்கள் சிக்கெனப் பிடிக்க வேண்டும்.

ஏனெனில் பிரதமர் மோடி தவிர்ந்த, வேறு யார் இந்தியாவின் பிரதமராக இருந்தாலும் அவர் ஈழத் தமிழ் மக்களின் விடயத்தில் பற்றுறுதியோடு செயற்படுவார் என்று எதிர்வுகூற முடியாது.

ஆகையால் 2024ஆம் ஆண்டு இந்தியாவில் பொதுத் தேர்தல் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், மிக விரைவாகப் பிரதமர் மோடியை சிக்கெனப் பிடித்து எங்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வை அடைந்தே ஆக வேண்டும்.

இல்லையேல் மிகப் பெரும் வரலாற்றுத் தவறை இழைத்த பாவ பழிக்கு தமிழ் அரசியல் தரப்புகள் ஆளாகுவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

## அரச வங்கி ஊடாக வட்டியில்லாக் கடன் அமைச்சரவை அனுமதி - அமைச்சர் பந்துல

அரசு சாரா பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் 07 ஆவது குழுவை இணைத்து கொள்வதற்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரச சார்பற்ற பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் 07 ஆவது குழுவை இணைத்துக் கொள்வதற்காக 2023. 04.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி முழுமையான கடன் காலப்பகுதிக்கான 13% குறைந்த வட்டி வீதத்தைப் பேணி இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களில் பொருத்தமான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்களை 07 ஆவது அணிக்கு வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ம-7)

## ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்விலை 305.13 ரூபாயாக அதிகரித்துள்ள அதேநேரம் விற்பனை விலை 319.32 ரூபாயாக உள்ளது.

மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட நடுத்தர மாற்று வீதம் 312.78 ரூபாயாகும், இதேவேளை கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி டொலர் 362.66 ரூபாயாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மாணவர்களுக்கான காப்புறுதி மீண்டும் ஆரம்பிக்கப்படும்

### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'சுராக்ஷ' காப்புறுதித் திட்டம் 2024 இல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதியளித்துள்ளார். நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதித் திட்டம் கடந்த நிர்வாகத்தின் போது இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய அடுத்த ஆண்டு முதல் காப்புறுதி திட்டம் மீள அறிமுகப்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் உறுதியளித்துள்ளார். (ம-7)

## கட்டுநாயக்கவில் 16 கோடி பெறுமதியான தங்கம் பறிமுதல்

திரவத் தங்கம் மற்றும் பவுடர்களை சென்னைக்கு கடத்திச் செல்ல முயன்ற 5 வர்த்தகர்களை சுங்கப் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து நேற்று பகல் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட திரவ தங்கம் மற்றும் பவுடர்களின் பெறுமதி சுமார் 16 கோடியே 40 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய வர்த்தகர்கள் நால்வரும் 55 வயதுடைய வர்த்தகர் ஒருவரும் இந்த திரவ தங்கப் பொதிகளை விமான நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளில் 8 கிலோ 650 கிராம் எடையுள்ள 23 திரவ தங்க வில்லைகள் மற்றும் தங்கப் பொடி அடங்கிய 10 பொதிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுங்க அதிகாரிகள் அவற்றைக் கண்டுபிடித்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட தங்க ஜெல் வில்லைகள் மற்றும் தங்கத்தூள் பொதிகளை மேலதிக விசாரணைகளுக்காக கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்க சுங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## பெற்றோலிய விநியோகம் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் பெற்றோலிய இறக்குமதி ஏற்றுமதி விற்பனை, வழங்கல் விநியோகம் போன்றவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரமுள்ளது.

நிதி மற்றும் தொழில்நுட்பத்திறன் கொண்ட நிறுவனங்கள் அமைச்சின் செயலாளரிடம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அவ்விண்ணப்பங்கள் குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், அமைச்சரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் வருடாந்த கட்டணத்திற்கு உட்பட்டு, 20 வருட காலப் பகுதிக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தற்போது சீனாவின் Sinopec நிறுவனமும் அமெரிக்காவின் RM Parks நிறுவனமும் நாட்டின் பெற்றோலிய சந்தைக்குள் பிரவேசிக்க ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், அவுஸ்திரேலியாவின் United Petroleum நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

சீனாவின் Sinopec நிறுவனம் ஏற்கனவே Sinopec Sri Lanka என்ற பெயரில் இலங்கையில் தமது நிறுவனத்தை பதிவு செய்துள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 17.00 மணி வரை யாழ். பிரதேசத் தில்** மண்கும்பான் நீர்ப்பாசனசபை, மண்டைதீவு கடற்படை முகாம், அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயத்தடி, மண்டைதீவு, மண்கும்பான், மண்கும்பான் [illegible] ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பூவரசங்குளம், சாளம்பைக்குளம், சாளம்பைக்குளம் வீட்டுத் திட்டம், சோபாலாபுளியங்குளம், தாலிக்குளம், ஆசிக்குளம், மகாறம்பைகுளம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வவுனியாவளாகம் சாளம்பை புதிய வீட்டு திட்டம், சாளம்பைக்குளம் பல்கலைக்கழகவளாகம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** புக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்

## யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை குருநகர் கலையரங்கத் தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 23 மற்றும் 26 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம்/ சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொதுமக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, நீர் வழங்கல் கட்டணங்கள் செலுத்தல் போன்றன திட்டமிடப்பட்டுள்ளன.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே குறித்த செயற்பாட்டிற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

14

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அக்கல்வெட்டின் படி இவன் புத்த சமயத்தை சேர்ந்தவன் என்றும் கிரிவிகாரை என்னும் புத்த மடத்திற்கு தானம் அளித்தான் என்றும் உரோகணம் நாட்டில் சில காலம் தங்கியிருந்தான் எனவும் தெரிகிறது.

**பிட்டியன் (கி.பி. 459)**

பிட்டியன் என்பவன் களப்பிரர் காலத்தில் இலங்கையை ஆண்ட இராசராட்டிரப் பாண்டியர்களுள் ஆறாமானவன் (இறுதியானவனும் இவனே). இவன் திட்டியன் என்ற இராசராட்டிரப் பாண்டியர்களுள் ஐந்தமானவனின் ஆட்சிக்குப் பிறகு ஆண்டவன். இவன் ஆட்சியில் ஏழாம் மாதத்தின் போது தாது சேனன் என்ற உரோகண நாட்டு அரசன் இராசராட்டிரத்திற்கு படையெடுத்து வெற்றி பெற்று பிட்டியனையும் கொன்றான் என அறிய முடிகிறது. அதற்குப் பிறகு தாது சேனன் வழிவந்தோரே இராசராட்டிரத்தை ஆண்டனர். தாது சேனன் மௌரிய அரச வம்சத்தைச் சேர்ந்தவன்.

இலங்கை மௌரிய மன்னர்கள் (கி.பி. 459 - 691) என்பவர்கள் இலங்கை ஆண்ட மன்னர் வம்சத்தவர்களுள் இராசராட்டிரப் பாண்டியர் ஆட்சிக்கு முடிவிலும் இரண்டாம் லம்பகர்ண மன்னர்கள் ஆட்சி ஆரம்பத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையை ஆண்ட மன்னர்கள் ஆவர்.

**இலங்கை மௌரியவம்சம்**
**தாதுசேனன் (கி.பி. 459 - 477)**

தாதுசேனன் (459 - 477) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்தை சேர்ந்த முதல் மன்னனாவான். களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலிருந்து வந்த பாண்டியர் வேந்தர்கள் சிலர் இராசராட்டிரப் பாண்டியர் என்னும் ஆட்சியை தொடக்கி வைத்தனர். அக் காலத்தில் தாது சேனன் அநுராதபுரம் மகாவிகாரை என்னும் பௌத்தப் பள்ளியில் இருந்தான். இவனுக்கு நாடாளும் ஆசையிருக்கிறதை அறிந்த இவனுடைய தாய்மாமன் இவனுக்கு மதநூல்களை போதிக்காமல் அரசியல் நூல்களை போதித்தான். தனக்கெதிரான தாதுசேனன் பௌத்தப் பள்ளியில் இருப்பதை அறிந்த முதலாம் இராசரட்டிரப் பாண்டியன் பாண்டு இவனை கைது செய்வதற்கு முயற்சித்தான். இதை அறிந்த தாதுசேனனும் அவன் மாமனும் மகாவலிகங்கை தாண்டிச் சென்று உருகுணை காட்டுப் பகுதிக்குச் சென்றனர். அக்காலத்தில் உருகுணை கலகக்காரர்களுக்குப் புகலிடமாக விளங்கியது. அங்கிருந்து இராசராட்டிரப் பாண்டியர்கள் மீது படையெடுக்கதக்க சமயம் பார்த்திருந்தனர் தாதுசேனனைச் சேர்ந்தவர்கள். ஆறு இராசராட்டிரப் பாண்டியர் மன்னர் ஆட்சியிலும் இராசராட்டிரம் மீது படையெடுத்தான். அனைத்து படையெடுப்பிலும் பாண்டிய மன்னர்களுக்கே வெற்றி கிட்டினாலும் திரிதரன் மற்றும் தாட்டியன் போன்ற இராசராட்டிரப் பாண்டியர்கள் இவனால் கொல்லப்பட்டனர். முடிவாக ஆறாம் இராசராட்டிரப் பாண்டியமன்னனான பிட்டியன் ஆட்சியில் அவனைக் கொன்று இலங்கையைக் கைப்பற்றினான் தாதுசேனன். அதிலிருந்து இராசராடிரப் பாண்டியர் ஆட்சி முடிவு பெற்றது. மௌரிய வம்சத்தைச் சேர்ந்த இவனது வழிவந்தோரே அதன் பிறகு இலங்கையை சில நூற்றாண்டுகள் அரசாண்டனர்.

**உள்நாட்டுப்பகை**

தாது சேனனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். முதல் அரச குலமனைவிக்கு முதலாம் முகலன் என்ற மகனும் ஒருமகளும் இருந்தனர். மற்றொரு மனைவிக்கு முதலாம் காசியப்பன் என்ற மகனுண்டு. தாது சேனனின் தங்கை மகனுக்கு தன் முதல் மனைவியின் பெண்ணை மண முடித்து அவனையே அமைச்சனாகவும் வைத்துக் கொண்டான். தன் பெண்ணை அமைச்சன் கொடுமைப்படுத்துகிறான் என்பதை அறிந்த தாதுசேனன் தன் தங்கையான அமைச்சனின் தாயை கொன்றுவிட்டான். அதனால் கோபமடைந்த அமைச்சன் காசியப்பனிடம் சென்று அவனுக்கு அரசாளும் ஆசையை ஊட்டிவிட்டு அவனின் தந்தையான தாது சேனனையே கைது செய்யுமாறு செய்துவிட்டான். அதனால் பட்டத்துக்கு உரியவனான முகலன் தமிழகத்திற்கு தப்பி விட்டான். அமைச்சன் அதனோடு நில்லாமல் காசியப்பனிடம் மீண்டும் சென்று உன் தந்தையான தாது சேனன் இலங்கையின் செல்வங்களை முகலனுக்காக ஒளித்து வைத்திருப்பதாக கூறியவுடன் தாதுசேனனையே காசியப்பன் கொன்று விட்டான். அதன் பிறகு காசியப்பன் (கி.பி. 477-495) இலங்கையை அரசாண்டான்.

**முதலாம் காசியப்பன்**
**(கி.பி. 477 - 495)**

முதலாம் காசியப்பன் (477 - 495) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்தில் இரண்டாம் மன்னனாவான். இவன் மௌரிய மன்னர்கள் வம்சத்தில் முதலாமானவனும் தன் தந்தையுமானவனான தாதுசேனன் என்பவனைச் சிறையில் அடைத்து கொன்று விட்டு அரசக் கட்டிலில் ஏறியவன். காசியப்பனின் தந்தையின் இன்னொரு மனைவியின் மகனும் ஆட்சிக்கு ஏற வேண்டியபட்டத்து இளவரசனான முதலாம் முகலன் (495 - 512) என்பவன் தன் தந்தையைக் காசியப்பன் கொன்றுவிட்டதை அறிந்தவுடன் தமிழ் நாட்டுக்கு தப்பிச் சென்றான். அவன் திரும்பி வந்து தன்னைத் தாக்கக்கூடும் என்றெண்ணிய காசியப்பன் சீககிரி (தற்போதுள்ள அநுராதபுரத்திலிருந்து தென்கிழக்கே இருக்கும் சிகிரியா) என்னும் மலைக் கோட்டை அரண்மனையைக் கட்டி அங்கிருந்து அரசாண்டான்.

இவனுடைய பதினெட்டாம் ஆட்சியாண்டில் இவன் எதிர்பார்த்தபடியே முதலாம் முகலன் தன் நண்பர்களான தமிழ் நாட்டு நிகந்தர்களை இணைத்துக் கொண்டு படையெடுத்


சிகிரியா

துவந்தான். தான் தோற்று விடுவோம் என்று தெரிந்தவுடன் காசியப்பன் தன் வாளால் தன் தலையை வெட்டி தற்கொலை செய்து கொண்டான். அதன் பிறகு முகலனே இலங்கையை அரசாண்டான். காசியப்பன் இறப்பதற்கு முன் அவன் அனுப்பிய திருமுகம் ஒன்று ஆறாம் நூற்றாண்டின் போது சீன அரசன் ஒருவனுக்கு சென்றிருக்கிறது என்பதைக் கொண்டு இவன் அரசாட்சிக் காலத்தை ஐந்தாம் நூற்றாண்டென நிச்சயிக்க முடிகிறது.

**முதலாம் முகலன்**
**(கி.பி. 495 -512)**

முதலாம் மொக்கல்லானன் அல்லது முதலாம் முகலன்(கி.பி. 495 - 512) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்தில் மூன்றாம் மன்னனாவான். காசியப்பன் தன் வாளால் தன் தலையை வெட்டி தற்கொலை செய்து கொண்ட பிறகு முகலனே இலங்கையை அரசாண்டான்.

மேலும் தன் தந்தையான தாது சேனனை கொல்ல காசியப்பனுக்கு உதவியாய் இருந்த 1000 பேர்களையும் முகலன் கொன்று விட்டான். மற்ற சிலபேர்களின் மூக்கையும் காதையும் அறுத்து அவர்களை நாடு கடத்தியும் விட்டான். இதனால் தமிழகத்திலிருந்து தன் மீது படையெடுத்து வருவார்கள் என்பதையறிந்த இவன் பல ஏற்பாடுகளை செய்து இலங்கையை 18 ஆண்டுகள் அரசாண்டான். இவனுக்குப் பிறகு இவனுடைய மூத்த மகனான குமாரதாது சேனன் என்பவன் இலங்கையை அரசாண்டான்.

**குமாரதாது சேனன்**
**(கி.பி. 512 - 521)**

குமாரதாது சேனன் (512 - 521) இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் நான்காம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் மூன்றாமானவனும் தன் தந்தையுமான முதலாம் முகலன் இறந்த பிறகு ஆட்சிக் கட்டிலில் ஏறினான். இவனின் அமைச்சனின் மகனான காளிதாசன் என்பவனுடன் இவனுக்கு உயிருக்கு மேலான நட்பு இருந்தது. அவன் இறந்தவுடன் அந்த துயரம் தாங்காமலே இவனும் உயிர் நீத்தான். இவனுக்குப் பிறகு இவனுடைய மகனான கீர்த்திசேனன் இலங்கையை அரசாண்டான்.

**கீர்த்திசேனன் (கி.பி. 521)**

கீர்த்திசேனன் (521) இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் ஐந்தாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் நான்காமானவனும் தன் தந்தையுமான குமாரதாது சேனன் இறந்த பிறகு ஆட்சிக் கட்டிலில் ஏறினான். இவனுடைய ஆட்சிக் காலத்தின் 9 ஆம் மாதத்தில் இவனுடைய தாய் மாமனான சிவ மௌரியன் என்பவன் இவனைக் கொன்று அரசக் கட்டிலில் ஏறினான்.

**சிவமௌரியன் (கி.பி. 521)**

சிவமௌரியன் (521) என்பவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் ஆறாம் மன்னனாவான். இவன் இலங்கை மௌரிய மன்னர்கள் வம்சத்துள் ஐந்தாமானவனும் தன் தங்கை வழி மருமகனுமான கீர்த்திசேனன் என்பவனைக் கொன்று ஆட்சிக் கட்டிலில் ஏறினான். இவனுடைய ஆட்சிக் காலத்தின் 25 ஆம் நாளில் கீர்த்தி சேனனின் பாட்டன் முதலாம் முகலன் என்பவனின் தங்கையை மணந்த மூன்றாம் உபதீசன் என்பவன் இவனைக் கொன்று அரசக் கட்டிலில் ஏறினான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்றுநோயால்...

தாகவும் சீமாட்டி சிறுவர் வைத்திய சாலையின் விசேட வைத்திய நிபுணர் டீபல் பெரேரா தெரிவித்துள்ளார்.

"ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இவ்வாறான நிலை காணப்படவில்லை. இந்த நிலைமைக்கு பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன" என்று வைத்தியர் பெரேரா கூறினார்.

எமது சிறுவர்களைப் பாதுகாக்க சிறந்த உணவுப் பழக்கவழக்கங்களைக் கையாளல், துரித உணவுகளைத் தவிர்த்தல் மற்றும் உடற்பயிற்சி செயற்பாடுகளை அதிகரித்தல் போன்றவற்றை பின்பற்றுதல் அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## சரத் வீரசேகர...

தொல்பொருள் தொடர்பில் ஆராயும் அதிகாரம் அவருக்கு இல்லை. இலங்கை சிங்கள, பௌத்த நாடு என்பதை நீதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக நீதிபதிகளும் செயற்படுகின்றார்கள்.

ஆகவே பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும்" என்று அழைப்பு விடுத்திருந்தார். அவரது கருத்து பல்வேறு சர்ச்சைகளையும் விமர்சனங்களையும் தோற்றுவித்திருந்த பின்னணியிலேயே, சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றின் ஊடாக மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதுடன் நீதிமன்றத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் நாம் கொண்டிருக்கும் கடப்பாட்டை மீளுறுதிப்படுத்துகின்றோம்.

இருப்பினும் அண்மையகாலங்களில் அதிகரித்துவரும் நீதிமன்றத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்கும் போக்கு, மேற்கூறப்பட்ட முக்கிய கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதில் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும்.

அண்மையகாலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமக்குரிய பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிமன்றத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தின் கருத்து வெளியிடும் போக்கு மேலோங்கிவருவது குறித்து நாம் மிகுந்த கரிசனையடைகின்றோம்.

குறிப்பாகக் கடந்த 7ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவினால் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கருத்தை நாட்டின் மிக முக்கிய அடிப்படைக் கட்டமைப்பான நீதிமன்றத்தின் மீதான மிக மோசமான தாக்குதலாகவே நாம் கருதுகின்றோம்.

நீதிமன்றக் கட்டமைப்பை எவ்வித வெளியக அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் தலையீடுகளுமின்றி சுதந்திரமாக இயக்குவதற்கு அனுமதிப்பதென்பது துடிப்பான ஜனநாயகத்தின் நிலைத்திருப்புக்கு இன்றியமையாதது என்பதே எமது நிலைப்பாடாகும். நீதிமன்ற சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படைக் கோட்பாடுகளும் அதனையே பிரதிபலிக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதிமன்றத்தின் சுதந்திரத்துக்கு இடமளிப்பதும், மதிப்பளிப்பதும் அரசாங்கம் மற்றும் எதிர்த்தரப்பு ஆகியவற்றின் கடமை என்பதுடன் நீதிமன்ற செயற்பாடுகள் மீதான எந்தவொரு தலையீடும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கு, கிழக்கு...

முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவிற்கு முரணாக கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு நீதவான் T.சரவணராஜா கடந்த 4ஆம் திகதி அங்கு சென்று பார்வையிட்டிருந்தார்.

இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கடந்த வெள்ளிக்கிழமை சபையில் நீதவானை விமர்சிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதனிடையே, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாகவும் மாவட்ட சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சபையில் ஆற்றிய உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தின் செயற்பாடுகளிலிருந்து சட்டத்தரணிகள் விலகியிருந்தனர்.

யாழ்.சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளும் வழக்குகளுக்காக ஆஜராகுவதை நேற்று தவிர்த்துக் கொண்டனர்.

சட்டத்தரணிகளின் பணிப்பகிஷ்கரிப்பினால் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் செயற்பாடுகளும் நேற்று ஸ்தம்பிதமடைந்திருந்தன.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் பாராளுமன்ற உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரிலும் சட்டத்தரணிகள் நீதிமன்ற செயற்பாடுகளை நேற்று பகிஷ்கரித்தனர்.

கல்முனையிலும் சட்டத்தரணிகள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர். (ம-7)

## நட்டஈடு...

நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த 28ஆம் திகதி 15 மில்லியனை இழப்பீடாக செலுத்திய அவர், மீதமுள்ள தொகையை 2024 ஜூன் 30 முதல் 2033 ஜூன் 20 வரை கட்டம் கட்டமாக 8.5 மில்லியனை செலுத்துவதாக கூறியுள்ளார்.

தாக்குதல் சம்பவத்திற்கு முன்னர் தங்களுக்கு கிடைத்த உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில் அவர்கள் செயற்படத் தவறியதால் உயிரிழந்தவர்களுக்கு மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட நிதியில் இருந்து 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணிகள் ஊடாக உச்ச நீதிமன்றில் சமர்ப்பித்த பிரேரணையில் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் 97,500 ரூபாயை ஓய்வூதியமாகப் பெறுவதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 54,285/- பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சாந்...

ஊடாக ஜனாதிபதிக்கான கடிதத்தையும் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் ஊடாக வெளி விவகார அமைச்சருக்கான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற சாந்தன் உள்ளிட்டவர்களை அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் கடந்த ஆண்டு நவம்பரில் விடுதலை செய்தது.

இதில், இலங்கையர்களான சாந்தன், முருகன், றொபேர்ட், ஜெயக்குமார் ஆகிய நால்வர் திருச்சி சிறப்பு முகாமில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த சாந்தன், தன்னை இலங்கைக்குள் வர அனுமதிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தியை வெளியிட்டுள்ளன. (ம-7)

## நவம்பர் 27...

முடிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ம-7)

தன. நிதானய
திகதி - 2023.07.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1202
L 35 40 63 73 L
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.11 | சீட்டிழுப்பு இலக்கம் 3414
ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 01 19 24 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1520
வெற்றி எழுத்து X | சுப்பர் இலக்கம் 02 | வெற்றி இலக்கங்கள் 10 25 37 44

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.11
சீட்டிழுப்பு இலக்கம் 481
இடபம் 04 32 35 58 இடபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/11
சீட்டிழுப்பு இலக்கம் 5172
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
S 8 7 9 2 3 7
தேசிய லொத்தர் சபை

அத கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 1972
சீட்டிழுப்பு திகதி : 2023.07.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,626,566/-
வெற்றி இலக்கங்கள் 01 44 56 74 Q
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 15 16 28 31 X
DLB

கப்ருக
திகதி 11.07.2023 | வெற்றி வாரம் 1322
Z 18 21 36 52 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 415,542,284.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 02 22 56 62 X
DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3858 | வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.11 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 48 52 62 | மேஷம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,591,468/-
ராசி அதிர்ஷ்டம் "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 02 12 38 46
DLB

சசிரி
வெற்றி வாரம் 348
சீட்டிழுப்பு திகதி 2023.07.11
வெற்றி இலக்கங்கள் 07 34 36
[illegible] 08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,190,720/-
DLB

சனிதா
திகதி 2023.07.11 | வெற்றி வாரம் 4307 | வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 08 12 19 51 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,660,328.00
சனிதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 17 37 38 52 F
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2146 | வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.11 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 09 12 17 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,533,524.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 07 38 45 63 Y
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16222)

076 825 7716 (ஆகாஸ்)

# மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த ஜனாதிபதி உத்தரவு

மக்கள் தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் பிரிவு 2 (அத்தியாயம் 143) மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இது தொடர்பான அதி விசேட வர்த்தமானி ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மக்கள் தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-7)

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/= (16033)
T.P:077 544 8503



மாபிள் கிளீனர்
சமையலறை, குளியலறை அனைத்து விதமான மாபிள்களையும் சிறந்த முறையில் கிளீன் செய்து தரப்படும். (16273)
077 803 3199

பணியாளர் தேவை
சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் கல் அரிவு ஆலை ஒன்றுக்கு கீழ்வரும் வேலைகளுக்குரிய பணியாளர் தேவை.
- மெசின் கல்லு அடித்தல்
- வேலித் தூண், கப்புத் தூண் போடுதல்
- உழவு இயந்திரம் ஓட்டுதல்
(C-6904)
077 940 0963

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- சுன்னாகம் - சாவகச்சேரி அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (150,000/=) மட்டும்
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.
(16278)
076 826 0354
076 057 0354

வேலையாட்கள் தேவை
யாழ். வை.எம்.சி.ஏ இற்கு Room boy தேவை.
சம்பளம் ரூ.1,300.00 (நாளொன்றுக்கு) வழங்கப்படும்.
(C-6900)
021 222 2499
021 720 1436

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport க்கு
இலங்கை விசா நீடித்து தரப்படும்
(C-6903)





COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
(C-6903)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்புடையீர்!

கடந்த *14.06.2023* அன்று இறைபதமடைந்த முல்லைத்தீவு குமுழமுனையை பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் சின்னத்தம்பி செல்லம்மா

அவர்களது அந்தியேட்டிக் கிரியை இன்று 12.07.2023 புதன்கிழமை அம்பலவன் பொக்கணையிலும் 14.07.2023 வெள்ளிக்கிழமை அன்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது, அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளை நேரில் வருகை தந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல், மின்னஞ்சல், RIP Book ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**2ம் வட்டாரம்,**
**அம்மன் கோவிலடி,**
**புதுக்குடியிருப்பு,**
**முல்லைத்தீவு.**

(16246)

**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org